# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 31ஞாயிற்றுக்கிழமை (16-08-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 223


AUG 1998

# 17 இந்திய மாலுமிகளையும் இன்று விடுவிக்க ஏற்பாடு!

## செஞ். அதிகாரிகள் நேற்று சந்தித்து பேசினர்

கொழும்பு, ஓகஸ்ட். 16

முல்லைத்தீவுக் கடலில் வைத்து நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா விமானப் படையினரால் குண்டு வீசித் தாக்கப்பட்ட "பிரின்ஸஸ் காஷ்" கப்பலைச் சேர்ந்த 22 மாலுமிகளில் 17 பேர் இன்று விடுதலைப் புலிகளால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்று விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் 17 பேரும் இந்திய மாலுமிகள் ஆவர்.

ஏனைய 5 ஸ்ரீலங்கா மாலுமிகளையும் விடுவிப்பதற்கு செஞ்சிலுவைச் சர்வ

(10 ஆம் பக்கம் பார்க்க)

### கப்டன் மீதான குற்றச்சாட்டு

## ஜனாதிபதியுடன் இந்திய தூதர் சந்திப்பு!

லண்டன், ஓக. 16

விடுதலைப் புலிகளுக்கு தேவையான தடை செய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு சென்றார் என இந்தியரான 'பிரின்ஸஸ் காஷ்' கப்பல் கப்டன் மீது இலங்கை அரசு சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு தடைசெய்த பொருள்களை ஏற்றிச் சென்றமையினாலேயே கடற்படையினரின் எச்சரிக்கையை கப்பல் கப்டன் ஏற்று நடக்கவில்லை என இலங்கை அரசு சுமத்தியுள்ள குற்றச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புளொட் உறுப்பினர் பலி!

வவுனியா தேக்கங்காடு என்ற இடத்தில் புளொட் உறுப்பினர் ஒருவர் விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என வவுனியாவில் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

புளொட் அமைப்பைச் சேர்ந்த ஓவியன் (மட்டக்களப்பு) என்பவர் வவுனியா தேக்கங்காட்டுப் பகுதியில் தனது மனைவியுடன் வாழ்ந்து வந்தார் எனவும்—

நேற்றுக்காலை 7.45 மணியளவில் சைக்கிளில் வந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)



சொல்லில அவதானம் தேவை எண்டு அதுதான் சொல்லுறது பாருங்கோ ...!

## பூவரசங்குளம் பாதை நேற்று திறக்கப்படவில்லை

வவுனியா, ஓக. 16

வவுனியாவிலிருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கான போக்குவரத்துக்காக நேற்று திறந்து வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்ட பூவரசங்குளம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் கப்டன் கொழும்பில் விசாரிக்கப்படுவார்!

கொழும்பு, ஓக. 16

'பிரின்ஸஸ் காஷ்' கப்பலின் கப்டன் விடுதலை செய்யப்பட்டு கொழும்பு செல்லும் பட்சத்தில் கொழும்பில் அவர் பொலீஸாரினால் விசாரணைக்கு உள்ளாவார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கரையிலிருந்து 55 கடல் மைல்களுக்கு அப்பாலேயே கப்பலை ஓட்டிச்செல்லவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் இந்தியரான கப்பல் கப்டன் கப்பலை அவ்வாறு ஓட்டிச் செல்லவில்லை எனவும் —

இதனாலேயே கப்பல் விடுதலைப் புலிகளிடம் சிக்கியது எனவும் —

இலங்கை அரசால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

## வர்த்தகர் உட்பட இருவர் பொலீஸ் விசாரணையில்

கொழும்பு, ஓகஸ்ட் 16

முல்லைத்தீவு கப்பல் விவகாரம் தொடர்பாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொழும்பு வர்த்தகர் ஒருவரும்—

இக்கப்பலை வாடகைக்கு அமர்த்திய கப்பல் நிறுவனத்தின் அதிகாரி ஒருவரும் நேற்று முன்தினம் இரவு பொலீஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

எஸ். வி. முருகேசு நிறுவனத்தைச் சேர்ந்த எஸ். வி. எம். சகானந்தன் என்பவரே கைதான வர்த்தகர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கப்பலில் அனுப்பப்பட்ட பொருள்கள் தொடர்பாக இவரிடம் விசாரிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

(இ-5-8-3)

## தாக்க வேண்டாம் என கப்டன் கேட்டிருந்தார்

வவுனியா, ஓக. 16

விடுதலைப் புலிகளால் தாம் வழிமறிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் —

எனவே விசாரணை முடியும் வரை கப்பலுக்கோ அல்லது மாலுமிகளுக்கோ தாக்குதல்கள் மூலம் எந்த விதமான பாதிப்புகளையும் ஏற்படுத்த வேண்டாம் எனவும்—

'பிரின்ஸஸ் காஷ்' கப்பலின் கப்டன் வி. என். தாக்கிறே இலங்கை அரசையும், பாதுகாப்பு அமைச்சையும் கேட்டிருந்தார்.

விடுதலைப் புலிகள் மூலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின உதவியுடன் இந்த வேண்டுகோளை கப்பல் கப்டன் விடுத்திருந்தார் என்று கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளினால் பாதுகாப்பான முறையில் தாம் விசாரிக்கப்பட்டு வருவதாகவும், எனவே விசாரணைகளின் பின்னர் பிரச்சினைகளை பேசித் தீர்க்கலாம். அதுவரை எந்தவித

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பாதிக்கப்பட்ட யாழ். வர்த்தகர்கள் நஷ்டஈடு தருமாறு கோருகின்றனர்

## அரச அதிபர், கட்சிப் பிரமுகர்களுடன் நேற்று சந்திப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16

முல்லைத்தீவுக் கடலில் குண்டு வீசி அழிக்கப்பட்ட 'பிறின்ஸஸ் காஷ்' கப்பலில் ஏற்றி வரப்பட்ட பொருள்களை இழந்து பாதிப்புற்றுள்ள யாழ். வர்த்தகர்கள் நேற்று யாழ். அரச அதிபர் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளைச் சந்தித்து —

தாம் இழந்துள்ள பொருள்களுக்கு நஷ்டஈடு பெற்றுத் தருமாறும், இந்தச்சம்பவம் தொடர்பாக வர்த்தகர்களை கைது செய்வதைத் தடுத்து நிறுத்துவதற்கு உதவுமாறும்— கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். நகரக் கொமாண்டர் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ், வடபகுதி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பலகல்ல ஆகியோரையும் விரைவில் சந்தித்து தமது இழப்புக்கு நஷ்டஈடு பெற்றுத் தருமாறு கோரவுள்ளனர்.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், ஈ பி. டி. பி யாழ். பொறுப்பாளர் எஸ். ஜெகன், தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். மாவட்ட செயலாளர் பொன் மதிமுகராசா, புளொட் அலுவலகப் பொறுப்பாளர் செ. கிருபைராசா ஆகியோரையும் இவர்கள் நேற்று நேரில் சென்று சந்தித்து தமது நிலைமையை விளக்கினர்.

யாழ். மாவட்ட சுயேச்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகள் நேற்று ஜனாதிபதிக்கு அவசரபக்ஸ்

யாழ்ப்பாணம், ஓக. 16

முல்லைத்திவுக் கடலில் வைத்து தாக்கி அழிக்கப்பட்ட "பிரின்ஸஸ் காஷ்" கப்பலில் பொருள்களை ஏற்றி வந்த யாழ். வர்த்தகர்களுக்கு வேண்டிய நஷ்டஈட்டை வழங்க வேண்டும் என தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

கப்பலில் பொருள்களை ஏற்றி வந்த வர்த்தகர்கள் தமக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நேற்று தமிழ் அரசியல் கட்சிகளை தனித்தனியே சந்தித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சாதாரண உடையில் நல்லூரில் பொலீஸார்

யாழ்ப்பாணம், ஓக. 16

நல்லூரில் ஆலய உற்சவத்தில் நடைபெறும் ஒழுக்கக்கேடான செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சாதாரண உடையில் பெண் பொலீஸாரும் ஆண் பொலீஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். மோகனதாஸ் அறிவித்துள்ளார்.

நல்லூர் உற்சவத்தில் பலரும் ஒழுக்கக்கேடான வகையிலும் அமைதிக்கும், புனிதத்துக் கும்பங்கம் விளைவிக்கும் வகையிலும் செயற்படுவதாக தமக்கு பல தரப்பினரிடமிருந்தும் முறைப்பாடுகள் வந்ததாகவும்—

இதனையடுத்தே தாம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் ப. சுலக்ஸ்சன்

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த
பத்மநாதன் சுகந்தி தம்பதிகளின்
செல்வப் புதல்வன் சுலக்ஸ்சன்

தனது முதலாவது பிறந்த நாளை (16. 08. 1998) ஞாயிற்றுக்கிழமை (இன்று) காரைநகர், அளவெட்டி தெற்கில், ''செல்வபதி'' இல்லத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அம்மா, அப்பா வாழ்த்துவதோடு, அம்மம்மா, அம்மப்பா, சுஜந்தாசித்தி, மற்றும் லண்டன் பெரியம்மா, பெரியப்பா, அபிஅக்கா, அளவெட்டி அப்பம்மா, அத்தைமார், மாமாமார், மச்சான், மச்சாள், வவுனியா அத்தை, மாமா, மல்லாவி பெரியஅத்தை, மாமா, மச்சான், மச்சாள், சுவீஸ் மச்சி, யாழ்., பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், கனடா ராசாஅண்ணா தீபன், அளவெட்டி பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அண்ணா, லண்டன் சுதன் அண்ணா மற்றும் உற்றார், உறவினர்களும் சுலக்ஸ்சனை பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

நன்றி!

திரு. திருமதி. பத்மநாதன்

கரவெட்டி கிழக்கு. [58391]

ஓம் சாயிராம்

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வன்

### கோபாலகிருஷ்ணன் பிரவீன்ராஜ்

நந்தாவில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த
கோபாலகிருஷ்ணன் உதயகுமாரி தம்பதிகளின்
செல்வப் புதல்வன் பிரவீன்ராஜ்

முதலாவது பிறந்த தினத்தை இன்று (16-08-98) தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசை அக்கா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, பெரிய பெரியப்பா குடும்பத்தினர் (லண்டன்), சின்னப் பெரியப்பா குடும்பத்தினர், குட்டிப் பெரியப்பா குடும்பத்தினர் (லண்டன்), பெரிய மாமா (ஜேர்மனி), குட்டி மாமா குடும்பத்தினர் (பிரான்ஸ்), சித்தப்பா குடும்பத்தினர், மாமா குடும்பத்தினர், பெரியப்பா, சித்தப்பா, அத்தைமார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர்கள் பிரவீன்ராஜ்ஜை எல்லாத் தெய்வங்களினதும் அருட்கடாட்சத்துடன் பல்கலையும் பயின்று நீடுழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

- குடும்பத்தினர்

நந்தாவில் லேன்,
கொக்குவில். (58390)

## கண்ணீர் அஞ்சலி

இந்திய திருச்சி மாவட்டம் லால் குடியைப்
பிறப்பிடமாகக் கொண்ட
நியாய சிரோமணி வித்யாசாகரம்

### பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்யசாஸ்திரிகள்

அவர்கள் இறைபதம் எய்தியமையை இட்டு அன்னாருக்கும் அவர்தம் குடும்பத்தினர்க்கும் எமது ஆழ்ந்த அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

பரிபாலனசபை,
சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி கோயில்.

சுழிபுரம். (58408)

## சமய சந்நிதியில்

ஏழாலை சிவ பூதவராய சுவாமி கோயில் அலங்கார உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் பிற்பகல் 3மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி சுவாமி வீதியுலாவைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு அருள் உரை வித்தகர் வ. குமாரசுவாமி ஐயாவின் சொற்பொழிவு இடம்பெறும். (ஐ-8)

★ ★ ★

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தின் சந்தானகோபாலர் உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கும், கைலாய வாகனம் மாலை 4 மணிக்கும் இடம்பெறவுள்ளன.

நாளை திங்கள் காலை 7 மணிக்கு கஜவல்லி மஹாவல்லி உற்சவமும், மாலை 4 மணிக்கு வேல் விமானமும் இடம்பெறும். (ஐ-8)

## பதிவுத்தபால் ஏற்கும் நேரம்

யாழ்ப்பாணம், ஒக. 16

யாழ். பிரதம தபாலகத்தில் பதிவுத் தபால்கள் தினமும் காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை கரும பீடத்தில் ஏற்றுக்கொள்ளப் படுவதாக பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார்.

(ஐ)

99- 1st in Com
& G A. Q.
Com. & Management
Mr. பசில் B. B. A.
Eco. Mr. இராஜேஸ்வரன்
B. Com.
English Mr. இராஜேஸ் B.A.
மற்றும்
Tamil. Hindu. Pol., Sc.
Chris. ஆரம்பம்.
SHAMROCK
யா/ஈச்சமோட்டை வீதி,
(சி/4574)

### நாகஸ்
சினிமா
சுன்னாகம்
2 ஆவது வெற்றி வாரமாக
சுப்பர் ஸ்ரார் ரஜனி
நக்மா நடித்த
### பாட்ஷா
திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்.
காட்சிகள்:- 10-30, 2-30
(58410)

### ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
2 ஆவது வெற்றி வாரம்
இந்தியாவில்
200 நாள்களுக்கு மேல்
ஓடிய
சிவாஜி - ராதா
ஜனகராஜ்-வடிவுக்கரசி
சத்தியராஜ் நடித்த
முதல் மரியாதை
( குடும்பச் சித்திரம் )
10-30 — 2-00, 6-00
(புதிய நேரம்)
(சி/4560)

### லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
ஞாயிறு, திங்கள்
மோகன், ரேவதி
கவுண்டமணி, செந்தில்
நடித்த
உதய கீதம்
நேரம்: 10-30, 2-30
Tele. No. 070-212223
(58276)

உ
சிவமயம்

## உடன் தொடர்பு கொள்ளவும்

த,குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் மூலம் கொழும்பில் பார்சல் ஏற்றியவர்கள் பற்றுச்சீட்டுடன் வந்து சந்திக்கவும்.

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,
352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(58412)

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா சிவகுமார்

மாதகலைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட யா/பரியோவான் கல்லூரி பழையமாணவன் (A.L.96) செல்லப்பா சிவகுமார் 10-08-1998 அன்று கொழும்பில் அகால மரணமானார்.

இவர் செல்லப்பா இராசலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், உதயகுமார் (கனடா), திருக்குமார் (கனடா), சந்திரபிரபா (கனடா), கங்காகௌரி, ஜெயக்குமார், அருந்தவகுமார், கிருசாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயக்குமார் (கனடா), தக்சினி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (16-08-1998) ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணிக்கு திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
க. செல்லப்பா
(தந்தை)

20, சிவபுரி,
திருகோணமலை,
T.P. 026-22704. (சி/4571)

### சீவரத்தினம் சாமுவேல் அரியரத்தினம்

(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

அல்வாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வீமன்காமம் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்டு இலக்கம் 126, 2 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவரான சீவரத்தினம் சாமுவேல் அரியரத்தினம் 14 - 08 - 98 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும், ஜோர்ஜ் (U. K), றெக்ஸ், ஜீவா, சாந்தி, ராஜன் (போதகர்—A. O. G) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், ஜெராயான் (U. K), மகாலிங்கம் (ஜேர்மனி), சிசிலியா கனகமலர், கோபி பிரதீபா ஆகியோரின் மாமனாரும், நிவேதினி (U. K), நிர்மல் (U. K), ஜோய் சூசன்னா, திலீபன், டிம்பிள், மயூரன் ஆகியோரின் பேரனும், திருமதி கிருபை செல்லத்தம்பியின் (மகறகம) அன்புச் சகோதரனுமாவார்.

நேற்று (15 - 08 - 98) நடைபெறவிருந்த அன்னாரின் நல்லடக்க ஆராதனை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு இன்று (16 - 08 - 98) ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
(58411) ஜீவா (மகன்)

### கதிரன் இரத்தினம்

வண்ணார்பண்ணை 242/1, மானிப்பாய் வீதியைச் சேர்ந்த கதிரன் இரத்தினம் 15-08-1998 சனிக்கிழமை பிற்பகல் 6 00 மணியளவில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், சரஸ்வதி, தனநாயகம், துரைநாயகம், இராஜநாயகம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சி. செல்லத்துரை, வை. ஆனந்தசுபீஸ்வரன், பாக்கியலட்சுமி, சரஸ்வதி (பேபி), இந்திரா ஆகியோரின் மாமனாரும் துளசி, சயந்தன், தர்ஷிகா, லக்ஷிகா, சுகன்ஜா, சிந்துஜா, நிரோஜன், கிருஷிகா, நிலோஜன், சோபியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16-08-98) ஞாயிறு மாலை 4 00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, தகனம் செய்யப்படும்.

தகவல்:
(53415) இ: தனநாயகம் (மகன்)

### நடேசு மனோகரன்

(வெளிக்கள உத்தியோகத்தர் (W.F.O) உணவுத் திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், குறொசெற் ஒழுங்கை 72 ஆம் இலக்கத்தில் வசித்த நடேசு மனோகரன் 15. 08. 98 நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான நடேசு தையல்நாயகி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா மற்றும் கனகம்மா ஆகியோரின் மருமகனும், ஸ்ரீ பாலமனோகரியின் அன்புக்கணவரும், நிர்த்தனனின் (மாணவன், பரியோவான் கல்லூரி) பாசமிகு தந்தையும், மகேந்திரராஜா (கனடா), மகாதேவன் (கொழும்பு), திருமதி மகாலட்சுமி யோகானந்தம் (சுதுமலை) ஆகியோரின் சகோதரனும், மனோகரன், மனோரஞ்சினி, மனோகரவனிதா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 16. 08. 98 காலை 10. 00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இல. 72, குறோசெற் லேன், ஸ்ரீ பாலமனோகரி
யாழ்ப்பாணம். (மனைவி) (58413)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துக்களில் வேறுபாடு; குறிக்கோள் ஒன்றே!

ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்திருந்த காலத்தில் இங்கு இருந்த சூழ்நிலை மிகவும் அருவருக்கத் தக்கதாகவிருந்தது. அந்த நேரத்தில் தமிழர் பண்பாடு தலைகீழாக மாறிக் கொண்டிருந்தது. வேற்று மதக் கொள்கைகள், வேற்று மொழிப் பண்புகள் எமது பண்பட்ட தமிழ் நாகரிகத்தைச் சிதைத்து வருவதையறிந்து மனம் நொந்து, மக்களிடையே புரட்சியொன்றை உருவாக்க முன்வந்தார் நாவலர்.

யும், வடமொழியாகிய சமஸ்கிருதத்தையும் ஆதாரமாகக் கொண்டு விளங்கியது. இருப்பினும், சிவநெறியின் சிறப்பு செந்தமிழ் மொழியினாலே தான் சிறப்புற்றது. செந்தமிழ் நாயன்மார்கள் அந்நெறியை நிலை நாட்டினார்கள்.

அந்நிலை சீரழிந்த நேரத்திலே தான் நல்லை நகர் தந்த நாவலர் பெருமான், நலிந்த சமயப் பண்பாடுகளைச் சீர்பெறவைத்தார். இந்திய மண்ணில் உதித்த எம் தமிழ் மக்களும் இவரால்

கொண்ட பொதுக் கொள்கைகள் சில, ஆறுமுகநாவலரின் கருத்துக்கு முரண்பட்டிருந்ததால், அருட்பா, மருட்பாப் போர் என்ற வகையில் விரும்பத்தகாத சில சம்பவங்களும் நிகழ்ந்தன.

ஆயினும் இருவரும் இருதுறைகளில் இறைவன்பால் இணையில்லாத பக்தி கொண்டிருந்தனர். மதமும், மதம் கடந்த நெறியும் தான் அன்றிருந்த சர்ச்சைக்குரிய விடயங்கள். இத்தகைய சம்பவங்கள், சர்ச்சைகள் வள்

## நாவலரும் வள்ளலாரும் உதாரணம்

எமது தமிழ்க் கலாசாரம் சிவநெறியோடு கட்டுண்டிருந்தது. திருவள்ளுவரைப் பற்றியும், திருக்குறளைப் பற்றியும் மக்களுக்கு எதுவும் தெரியாத நிலை. தமிழ்ப்



பண்பாட்டுக்கு இலக்கணமாயிருப்பது திருக்குறளே. எத்தனையோ சீர்கேடான, முறையற்ற கொள்கைகள் பல பிற்போக்காளர்களால் புகுத்தப்பட்டிருந்த போதிலும், சிவநெறியாகிய சைவ மதமே தமிழர் பண்பாட்டுடன் பெரிதும் ஒத்திருந்த மதமாகும்.

சைவம் தமிழ் மொழியை

பயனடைந்தனர். விரும்பத்தகாத சில செயல்கள் நடைபெற்றிருந்த போதிலும், சிந்தையிலே ஆறுமுகநாவலர் கொண்டிருந்த புனித எண்ணம், சிவநெறிக் கோட்பாடு அதன் கட்டுக் கோப்புகளுடன் பொலிவு பெற்று வளர வேண்டும் என்பதிலேயே அடங்கியதாயிருந்

**மதிவாணன்**

தது.

அக்காலத்திலேயே வடலூர் வள்ளலாருக்கும், அவருக்கும் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டிருந்தன. வள்ளலார், சாதி, மதபேதங்களைக் கடந்த சமரச சன்மார்க்க நெறியை வளர்க்க முயன்றார். சிறந்த அருளாளராகிய இராமலிங்கர்

ளலாரையும், ஆறுமுகநாவலரையும் நீங்கமன்ற விசார



ணைக்குக் கூட இழுத்துச் சென்றது.

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## பெரியவர், சிறியவர் என்பது சரியா...?

மேல், கீழ், மேலோர், கீழோர் என்ற சொற்கள் நமக்கு நன்கு பழகிப் போன சொற்கள்.

மேலாக இருக்கும் ஒன்று, அதற்கு மேலான ஒன்றை நோக்கக் கீழாக ஆகிவிடும். கீழாக இருக்கிற ஒன்று அதற்குக் கீழாக இருக்கும் ஒன்றை நோக்க மேலாக ஆகிவிடும்.

மாமிக்கு மேல் ஒரு மாமி இருப்பாள். மாமியும் இன்னொருத்திக்கு மருமகளாக இருந்தவள் தான்.

மேல் - கீழ் என்பவை மாமியார் - மருமகள் போல ஒப்பு நோக்கில் அமைந்த கருத்துக்கள்.

மேல் - கீழாகவும், கீழ் மேலாகவும் மாறுவது உண்டு.

மேல் - கீழ் என்ற படிநிலைகள் மட்டும் எல்லா நாடுகளிலும், எல்லாச் சமுதாயங்களிலும், எல்லா அமைப்புக்களிலும் எப்போதும் இருந்திருக்கின்றன. இன்றும் இருக்கின்றன.

இப்படிப்பட்ட படிநிலை தேவைதானா?

ஓர் அமைப்புக்கு அல்லது நிறுவனத்துக்கு இத்தகைய படிநிலை தவிர்க்க இயலாதது.

ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு செயற்பட வேண்டுமானால் படிநிலைகள் தவிர்க்க இயலாதவை.

படிநிலைகள் தேவை என்பதால் படிநிலையில் செயற்படும் மனிதர்களைத் தேக்கநிலைக்கு உள்ளாக்கும் போது அமைப்புக்கு மரணம் ஏற்படுகிறது.

மகனாக இருப்பவன் அப்படியே இருக்க முடியாது- அவன் இன்னொருவனுக்குத் தந்தையாக வேண்டும்.

இயக்கத்துக்குப் பயன்படும் மனிதர்களையும் படிநிலையில் மேல் ஏறி இயங்கவிட வேண்டும்.

மேல், கீழ் என்ற கருத்து இயக்கத்துக்கு உதவுகிற கருத்தாக - செயல் வேகத்தைத் தூண்டுகிற கருத்தாக - இருக்க வேண்டுமே தவிர, மனிதனைத் தேக்க நிலைக்கு உள்ளாக்கி அழிக்கும் கருத்தாக இருக்கக் கூடாது. இது படிநிலைக் கோட்பாட்டில் எப்போதும் நினைவிற் கொள்ளத் தக்கது.

மேல் என்றால் எப்படி மேல்? எதனால் மேல்? கீழ் என்றால் எப்படி கீழ்? எதனால் கீழ்?

வயதால், பதவியால், பண்பால், பணத்தால், சாதியால், பொதுவாக, மேல் - கீழ் என்று பேசுகிறார்கள்.

மேல் - கீழ் என்பது போலவே பெரியவர் சிறியவர் என்றும், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்றும் பேசுகிறோம்.

வயதாலும், பதவியாலும், பண்பாலும் மேல் கீழ் என்று பேசுவதைப் பொதுவாக உலகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

பணத்தாலும், சாதியாலும் மேல், கீழ் என்பதை சுயமரியாதை உணர்ச்சி உள்ள மனிதர்கள் எல்லோரும் ஏறக மறுக்கிறார்கள் – எதிர்க்கிறார்கள்.

நாம் எல்லோரும் மதித்துப்போற்றும் வள்ளுவர் மிகவும் எளிமையாக, ஆனால் ஆழமான பொருளோடு, கீழ், மேல் பற்றிப் பேசுகிறார்.

''மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்
கீழிருந்தும் கீழல்லார் கீழல்லர்''

என்பது வள்ளுவர் வாக்கு.

இங்கே மேல் - கீழ் என்ற படிநிலையை திருவள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இராமனின் முடிசூட்டு நிகழ்வுடன் கம்பனின் காவியம் முடிந்தது ஏன்?

இராமாயணம் என்ற காவியம் முதன் முதலில் வடமொழியிலேயே எழுதப்பட்டது. காலப்போக்கில் இது பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்துப் புனையப்பட்டது.

கவிச்சக்கரவர்த்தி கம்பன் இராமாயணத்தை தமிழில் விருத்தப்பாக்களால் புனைந்தான். அவ்வாறு செய்யும் பொழுது கதை அமைப்பிலும், சம்பவங்களிலும் சில மாற்றங்களைச் செய்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

வட நாட்டின் சூழ்நிலைக்கேற்ப வான்மீகி முனிவர் இராமாயணத்தை எழுதியிருந்தார். அதனை அப்படியே தமிழில் மொழிபெயர்ப்பின் தமிழ் நாட்டின் பண்பாடு, கலாசாரத்துடன் முரண்பட்டு நிற்கும் என்பதனை உணர்ந்தே கம்பன் மாற்றியமைக்க முனைந்தான். இதே நேரத்தில் காவியத்தை ரசனையுள்ளதாக்கும் பொருட்டு மெருகூட்டவும் தவறவில்லை.

இவ்வாறான மாற்றங்களைச் செய்வதற்கு மதிநுட்பத்துடன் செயற்பட்டதையும் காணமுடிகிறது. அதாவது கதையம்சங்களின் நம்பகத்தன்மை முக்கியமானது என்பதனைக் கம்பன் கவனத்தில் கொண்டுள்ளான்.

இராமாயணம் வட நாட்டையும், இலங்கையுட்படத் தமிழகத்தையும் நிலைக்களனாகக் கொண்ட ஒரு வரலாறாக ஒருபுறமும், சிறந்த காப்பியமாக மறுபுறமும் உள்ளது. ஆகவே அதனைத் தமிழில் படைக்கும் போது ஏனையவர்கள் குற்றம் காணாதவகையில் அமைக்க வேண்டியது அவசியமாக இருந்தது.

இக்காரணத்தில்தான் மேலும் வான்மீகி முனிவரின் முழுக்கதையையும் பின்பற்றாது கம்பன் இடைநடுவில் நிறுத்திவிட்டான். அதாவது இராமனுடைய பிள்ளைகளின் காலம்வரை வான்மீகி இராமாயணம் வளர்ந்து செல்கிறது. ஆனால் கம்பராமாயணம் இராமனுடைய முடிசூட்டு விழாவுடன் நிறைவடைகிறது. இதனைத் தகுந்த காரணத்துடன்தான் கம்பன் செய்துள்ளான் என்பது நன்கு ஆராய்ந்தால் புரியும்.

இதனைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் வான்மீகி இராமாயணத்தின் பிற்பகுதியை ஒருமுறை மீட்டுப் பார்ப்பது அவசியம்.

முடி சூட்டுவிழா நிறைவடைந்த பின்பு இராவணனால் கவர்ந்து செல்லப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த சீதையைப் பற்றி மக்கள் மாசு கற்பித்துப் கதை பேசுகிறார்கள். கற்புடையவள் தானா என்ற கேள்வியையும் எழுப்புகின்றனர்.

இதனால் மனமுடைந்த இராமன் சீதையை வான்மீகி முனிவரின் ஆச்சிரமத்தில் சில காலம் தங்கியிருக்கும் படி அனுப்பி வைக்கிறான்.

முனிவரின் ஆச்சிரமத்தில் வாழும் சீதை லவன் என்ற பிள்ளையைப் பெற்றெடுத்து வளர்த்து வருகிறாள்.

ஒருநாள் ஆற்றில் நீராடப் புறப்பட்ட சீதை கைக்குழந்தையான லவனை கொண்டு போய் தியானத்தில் இருக்கும் வான்மீகி முனிவரின் முன்னால் நிலத்தில் கிடத்தி விட்டுச் செல்கிறாள். சிறிது தூரம் சென்ற சீதைக்கு ஒரு மனப்பயம்

**கு.சி. சுந்தரம்பிள்ளை**

ஏற்படுகிறது.

வான்மீகி முனிவரோ கண்களை மூடியபடி தியானத்தில் இருக்கிறார். இந்த நிலையில் அவரால் குழந்தையை அவதானிக்க முடியாது. ஆகவே காட்டிலுள்ள மிருகங்களால் குழந்தைக்குக் கெடுதி ஏற்படக்கூடும் என்றும் சீதை அஞ்சுகிறாள்.

ஆகவே திரும்பிச் சென்று [illegible] எடுத்துச் செல்லுகிறாள். இதனை முனிவர் அறியவில்லை.

### தர்ப்பையில் குழந்தையா?

தியானம் முடிந்து விழித்துப் பார்த்த முனிவர் திகைக்கிறார். குழந்தையைக் காணாது தவிக்கிறார். சீதை வந்து ''குழந்தை எங்கே?'' எனக் கேட்டால் எப்படிப் பதிலிறுப்பது எனக் குழம்புகிறார்.

உடனே ஒரு தர்ப்பைப் புல்லை தன்முன்னால் போட்டு மந்திரிக்கிறார். அது ஒரு குழந்தையாக மாறுகிறது.

சீதை நீராடி விட்டுத் தன்னுடைய இருப்பிடம் செல்லும் போது முனிவரை அண்மிக்கிறாள். அங்கே ஒரு குழந்தையைக் காண்கிறாள்.

''சுவாமி இது யாருடைய குழந்தை?'' எனக் கேட்கிறாள்.

அப்போதுதான் சீதை தனது குழந்தையைத் திரும்ப எடுத்துச் சென்றதை முனிவர் உணர்ந்து கொள்கிறார்.

''இதுவும் உனக்குத்தான், எடுத்துச் செல்'' என விடையளிக்கிறார்.

[illegible] அக்குழந்தைக்கு '[illegible]சன்' எனப்பெயரிட்டு வளர்க்கிறாள்.

இனி இராமாயணத்தின் ஆரம்பக் கதையைப் பார்ப்போம்.

தசரதன் மூன்று மனைவியரைத் திருமணம் செய்திருந்தபோதிலும் தனக்குப் பின்பு பட்டம் சூட்ட ஒரு பிள்ளை பிறக்காததனால் வேதனையுறுகிறான். முனிவர்களின் ஆலோசனைக்கிணங்க அசுவமேத யாகம் வளர்க்கிறான்.

அந்த யாகத்தில் கிடைத்த அவிப்பாகத்தைத் தனது மனைவிமாருக்குக் கொடுத்து உண்ணச்செய்கிறான். அதன் பின்பு கோசலைக்கு இராமனும், கைகேயிக்குபரதனும், சுமித்திரைக்கு இலக்குமணன், சத்துருக்கன் ஆகிய இருவரும் பிறக்கின்றனர்.

இவ்வாறு கதை அமைகிறது. தர்ப்பைப் புல்லில் குழந்தையை உருவாக்கி கொடுத்ததில்தான் முரண்பாடு உருவாகியது.

தசரதச் சக்கரவர்த்தி பட்டத்திற்குப் பிள்ளை இல்லையே என வாடிய காலத்தில் வான்மீகி முனிவரும் அயோத்தியில் தான் வாழ்ந்தார். அப்போது இது போன்று ஒரு குழந்தையை

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலி

''நியாய சிரோமணி'' ''வித்தியாசாகரம்''

## பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகள்

அமரராகிய செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அவர் இழப்பு அந்தணர் குலத்திற்கும், சைவ உலகிற்கும் பெரும் இழப்பாகும். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் கூறுவதோடு அவரது ஆன்ம சாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கா. சாம்பசதாசிவக் குருக்கள்
குடும்பத்தினர்கள்.

ஸ்ரீ அரசகேசரி
பிள்ளையார் தேவஸ்தானம்,
நீர்வேலி.

(58395)

---

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

வித்யாசாகரம் நியாய சிரோமணி

பிரம்மஸ்ரீ

## கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகள்

சேர். பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனத்தின் சிவாச்சாரிய குருகுலத்தின் ஆரம்பகால பிரதம ஆசானும், வேதவிற்பன்னரும் அந்தணர் குலத்திலகமுமான

பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகளின் மறைவிற்கு எமது இதயபூர்வமான அஞ்சலியைச் செலுத்தி, துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆன்மா சாந்தியடைய ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரனின் பாதமலரைப் பிரார்த்திக்கின்றோம்.

சேர். பொன். இராமநாதன்,
வேதாகம ஆய்வு நிறுவனம்,
ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயம்,
யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி.

(58400)

---

உ
சிவமயம்

# இதய பூர்வாஞ்சலி

பாரத பூமியில் அவதாரம் செய்து லங்காதுவீபத்தின் மைந்தர்களுக்கும், சிறப்பாக விப்ர (பிராமண) சமூகத்திற்கும் அரிய பெரிய சேவையாற்றிய

வித்யாசாகரம் நியாய சிரோமணி

## பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகள்

அவர்களுக்கு

எமது ஹ்ருதயபூர்வ அஞ்சலியைப் பணிவன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வர சுவாமியின் திவ்ய பாத கமலங்களில் ஐக்கியமாகட்டும்!

சிவஸ்ரீ குமார சரவணபவக்குருக்கள்
பிரம்மஸ்ரீ கு. சுவாமிநாத சர்மா
(ஈசான சிவாச்சார்யர்)
பிரம்மஸ்ரீ சா. குமாரசாமி சர்மா
இணுவில் கிழக்கு, சுன்னாகம்.

[58394]

---

# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் ஸ்ரீ கணபதீஸ்வர குருகுல அதிபர்
'நியாய சிரோமணி'

பிரம்மஸ்ரீ

## கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகள்

(வேம்பத்தூர் - தமிழ்நாடு - இந்தியா)

14 - 08 – 98 வெள்ளிக்கிழமை காலை சிவபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் கொண்டு;

எமது ''வித்யா குரு' அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீ கணபதீஸ்வர குருகுல மாணவன்
ஸ்ரீ ஐயப்பதாஸன்
சாம்பசிவ சிவாச்சாரியார் J. P.
ஸ்தாபகர்
சர்வதேச இந்துமத குருபீடம்,
தலைவர்
இலங்கை பிராமண சமாஜம்,
90/22, ஜோசப் டயஸ் லேன் – கொழும்பு. 15
T. P. & FAX 527025.

(சி/4561)

---

மடல்
மோதல் தொடர்
அடுத்தவார
சூரியகாந்தியில்

# ஐ.தே.கவினர் மீது தாக்கு!

கொழும்பில் நேற்று முன்தினம் அதிகாலை சுவரொட்டி ஒட்டிய ஐ. தே. க. ஆதரவாளர்கள் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்தார்; மற்றும் மூவர் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள்.

மூன்று ஜீப்புகளில் வந்தவர்களே இத்தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

---

## இராமனின்.

(3 ஆம் பக்கத் தொடர்)

ஏன் உருவாக்கிக் கொடுக்கவில்லை என்ற சந்தேகம் எழுவது இயல்பானது. அசுவமேத யாகம் செய்வது மிக மிகக் கடினமானது. தர்ப்பையில் பிள்ளையை உருவாக்கிக் கொடுத்திருந்தால் தசரதன் இவ்வளவு செலவு செய்து யாகம் செய்திருக்க வேண்டியதில்லை! பல ஆண்டு காலமாக வருந்தியிருக்க நேர்ந்திராது!!

கதையம்சத்தில் இது ஒரு பெரும்முரண்பாடாகும். நம் பகுத் தன்மையைத் தகர்ப்பதாகவும் அமைகிறது.

தர்ப்பைப்புல்லில் பிள்ளை உருவாக்கப்பட்டது வெறும் சோடனை என்றால், "குசன்" யாருக்குப் பிறந்த பிள்ளை என்ற கேள்வி தொக்கி நிற்கிறது. அது சீதையின் கற்புக்குக் களங்கமாகி விடும்.

இப்படியான முரண்பாடுகளுக்குமுகம் கொடுக்க விரும்பாமலே கம்பன் தனது இராம காவியத்தை முடிசூட்டு விழாவுடன் நிறைவு செய்து விட்டான் என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது. ★

---


**COMPUTER POINT**
(TRAINING DIVISION)
28, ST. PATRICK'S RD, JAFFNA.
REGD: NO.
J/DS/BR/63/97




கணனியியல்
ஆரம்பப் பிரிவு,
டிப்ளோமாப் பிரிவு
வகுப்புக்கள்
ஆரம்பமாகவுள்ளன.

விண்ணப்பப் படிவத்தை எமது அலுவலகத்தில் பெற்று அதனைப் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம் உங்கள் அனுமதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

வகுப்புக்கள்
29 - 08 - 98,
01 - 09 - 98 இல்
ஆரம்பமாகவுள்ளன.

மேலதிக விவரங்கட்கு தொடர்பு கொள்க.

நிர்வாகி

(58399)


---

# தெல்லிப்பழையில் நாய்களுக்குத் தடுப்பூசி

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி மருந்து தற்போது போடப்பட்டு வருகின்றது.

விசர்நாய்கள், கட்டாக்காலிநாய்கள்ஒழிப்புநடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாய்கள் விடயத்தில் பொதுமக்கள் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும் எனவும் வீட்டு நாய்களுக்கு உரிய இடங்களில் கொண்டு சென்று தடுப்பூசியை போட்டுக் கொள்ளுமாறும் தெல்லிப்பழை பொதுச் சுகாதார பரிசோதகர் சச்சிதானந்தம் அறிவித்துள்ளார்.

தடுப்பூசி போடப்படாத நாய்கள் அனைத்தும் கட்டாக்காலி நாய்களாகக் கருதப்பட்டு அவை அழிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-152)

---

# இதயாஞ்சலி

நியாய சிரோமணி வித்தியாசாகரம்

## கி.சுப்பிரமண்யசாஸ்திரிகள்

அவர்கள் சிவபதமடைந்தமை குறித்து

ஸ்ரீவால கதிர்காம தேவஸ்தானம்

இதயாஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

1993 ஆம் ஆண்டு தேவஸ்தானம் அவரைக் கௌரவித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

–தேவஸ்தானம்

(58397)

---

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

நியாய சிரோமணி

## கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகள்

நாம் இன்று இவ்வுலகில் பேருடனும், புகழுடனும் கற்றவராய், பண்புடையராய் வாழ நல்வழி காட்டிய எமது ஆசான் அமரரான செய்தி கேட்டு ஆறாத்துயரடைந்தேன். அவரது பாதகமலங்களில் எனது அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.

என்னை அன்புடன் ஆதரித்த குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

பிரம்மஸ்ரீ ந. பாலசுப்பிரமணிய சர்மா
சொக்கலிங்கம் மீனாட்சி அம்மன் கோயில்,
மொறிசியஸ்.

(58402)

---

# இதயபூர்வமான பிரார்த்தனை

அந்தணர் குலத்திலகமும், வேத விற்பன்னரும், அந்தணர்களின் உயர்வுக்காகவும், சைவத்தின் மேன்மைக்காகவும் அயராது உழைத்தவரும், சமய சாஸ்திர அறிஞரும், குருகுலக் குருவுமாகிய வித்தியாசாகரம், நியாய சிரோமணி

பிரம்மஸ்ரீ

## கி. சுப்பிரமண்யசாஸ்திரிகளின்

மறைவிற்கு எமது இதயபூர்வமான அஞ்சலியைத் தெரிவித்து, துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆன்மா சாந்தி பெற ஸ்ரீகமலாம்பிகா சமேத கைலாசநாத சுவாமியின் திருவருளை இறைஞ்சுகின்றோம்.

'நியந்த்ரீ'
சிவன் கோயில், நல்லூர்.

(58401)

---

# கண்ணீர் அஞ்சலி

சிவானந்த குருகுல அதிபர்

## பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகள்

(நியாய சிரோமணி வித்யாசாகரம்)

அவர்களின் மறைவு சைவ சமயத்துக்கும், ஆலய குருமார்களுக்கும் பெரும் இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அஞ்சலியைச் செலுத்தி அவரது குடும்பத்தாரின் அனுதாபத்திலும் கலந்து கொள்கின்றோம்.

மாணவன்,
சிவஸ்ரீ ந. கேதீஸ்வரக் குருக்கள்,
(முன்னாள் குருகுல பழைய மாணவர் சங்க செயலாளர் 1978)
கதிரேசன் தேவஸ்தானம்,
அனுராதபுரம்.

(58406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

செல்வச்சந்நிதி அடியார்மடம்

## புதிய கட்டடத் திறப்பு விழா

வெகுதானிய ஆண்டு ஆவணித் திங்கள் முதலாந்திகதி (17 - 08 - 98) திங்கட்கிழமை காலை 9-00 மணிக்குச் சுமங்கலிப் பெண்கள் மங்கள விளக்கேற்ற மேற்படி மடத்து முருகனுக்கு அபிடேக ஆராதனைகள் நடந்து முடிந்ததும் அடியார்களுக்கு அன்னதானமும் நடைபெறும்; அனைவரையும் அன்புடனழைக்கின்றோம்.

ம. வெங்கடாசலபிள்ளை
நிர்வாகி

அடியார் மடம்,
செல்வச் சந்நிதி,
தொண்டமானாறு.

(58268)

## கண்ணீர் அஞ்சலி

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவரும், இலங்கை புகையிரத நிலைய இளைப்பாறிய அத்தியட்சகருமான

**தம்பையா குணலிங்கம்**

அவர்கள் 12 - 08 - 1998 அன்று காலமாகியதையிட்டு மேற்படி கல்லூரி பழைய மாணவர் சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு இவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

பழைய மாணவர் சங்கம்
ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்

[58379]

உ

## சுப்ரஹ்மண்யாஞ்சலி

நல்லூர்
வித்தியாசாகரம், நியாய சிரோமணி வித்யாகுரு

**பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகளின்**

பாதாரவிந்தங்களில் ஹ்ருதய பூர்வமான
கண்ணீர் அஞ்சலிகள்!
''ஸ்ரீ சுப்ரஹ்மண்யாய நமஸ்தே''

கி. சதாசிவசர்மா
சமஸ்கிருத பண்டிதர்

கீதாலயம்,
மட்டுவில்,
சாவகச்சேரி.

(58368)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு: 28 — 12 — 1933

இறப்பு: 11 — 07 — 1998

அமரர்

**வன்னியர் நாகலிங்கம்**

எங்கள் அன்புத் தெய்வமே ஐயா
மாதம் ஒன்று சென்றாலும் - மாசில்லா
உங்கள் அன்புமுகம் மறக்க முடியவில்லை!
பாசமுடன் எமை வளர்த்த தந்தையே
உமைநித்தமும் நினைத்து வாடுகின்றோம்.

எமது தந்தையின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் அளித்து பலவேறு வழியிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இன்று (16 - 08 - 1998) எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்

மனைவி, மகன் ரவி, ரவிச்சந்திரன் (சுவிஸ்)
பாலேஸ்வரன் (கொலண்ட்)
மருமகன் சந்திரகுமார்,
மகள் ஜெயந்தி (சுவிஸ்)
மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மச்சான்மார், சகோதரர்கள்.

தகவல்;
நா. நாகரத்தினம்
(மனைவி)
விக்கினேஸ்வரா வீதி, சங்கானை.

(58333)

## உப்பள ஊழியருக்கு சம்பளம் இல்லை

தென்மராட்சி, ஓக. 16

ஆனையிறவு தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றிய 320 ஊழியர்களுக்கு 1995 ஆம், 1996 ஆம் ஆண்டுகளுக்குரிய சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை.

இக் காலப்பகுதிக்குரிய சம்பளத்தை ஊழியர்களுக்குக் கடந்த தைப் பொங்கலுக்கு முன்னர் வழங்குமாறு ஜனாதிபதியினால் யாழ். அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டு திறைசேரியினால் இதற்குரிய கட்டுநிதி வழங்கப்பட்டுள்ளபோதிலும் இதுவரை சம்பளம் வழங்கப்படவில்லை. இது குறித்து ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (உ-117)

## விசர் நாய் கடித்தது

நெல்லியடி, ஓக. 16

இரவு வேளை வீட்டுக்கு வெளி விறாந்தையில் படுத்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் விசர்நாயினால் கடியுண்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 10 மணியளவில் இச் சம்பவம் துன்னாலை தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி தனபாலசிங்கம் (வயது 43) என்பவரே இடது கை மூட்டில் நாயினால் கடியுண்ட நிலையில் மந்திகையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-109)

## புதிய ஆளுநர்

கொழும்பு, ஓக. 15

அநுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதிபதவியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் ஜி. மேர்ஸி சமரவீர வடமத்திய மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மைத்திரிபால சேனநாயக்கா காலமானதால் இந்த ஆளுநர் பதவி வெற்றிடமானது தெரிந்ததே. (உ-21)

## வில்லிசை

யாழ்ப்பாணம், ஓக 16

பண்ணாகம் ஆலடி வைரவர் ஆலயத்தில் தற்போது நடைபெற்று வரும் மண்டலாபிஷேகநிகழ்விற் சிறப்பு நிகழ்ச்சியாக இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ''சத்தியவான் சாவித்திரி'' என்னும் பொருளிலான வில்லிசை இடம்பெறவுள்ளது. (உ-7)

## குரங்கு கடித்து இளைஞர் காயம்

நெல்லியடி, ஓக. 16

வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் குரங்கினால் கடியுண்டு கையில் காயத்துடன் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை 4 ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த வைத்தியநாதன் ஜீவேந்திரன் (வயது 32) என்பவரே கடந்த 10 ஆம் திகதி இரவு குரங்கினால் கடியுண்டவராவர். உ-109)

## சங்கீத சபை பரீட்சை முடிவுகள்

குருநகர் ஓக. 16

வட இலங்கை சங்கீத சபை கடந்த ஏப்ரலில் அகில இலங்கை ரீதியில் நடத்திய சங்கீதம், நடன பரீட்சைகளுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து தோற்றிய பரீட்சார்திகளுக்கான பெறுபேறுகளை தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சங்கீத சபை தெரிவித்துள்ளது.

பிறமாவட்டங்களில்இருந்து பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான பெறுபேறுகள் விரைவில் அனுப்பி வைக்கப்பட உள்ளதாகத் தெரிகிறது.

இப் பரீட்சைக்கு அகில இலங்கை ரீதியில் சுமார் [illegible] தோற்றியிருந்தனர் (உ-51)

## யுத்த நடவடிக்கையால் 9 தபாலகங்கள் சேதம்

யாழ்ப்பாணம். ஓக, 16

கடந்த காலங்களில இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளினால் யாழ். குடாவில் ஒன்பது தபாலகங்கள் சேதமடைந்துள்ளன.

சுழிபுரம், சுண்டுக்குளி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, காரைநகர், காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, பளை போன்ற இடங்களில் இயங்கி வந்த தபாலகங்களே சேதமடைந்துள்ளன.

இவற்றில் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை தபாலகங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

எமது குருநாதர் நியாய சிரோமணி,
வித்யாஸாகரம் பிரம்மஸ்ரீ

**கி. சுப்ரம்மண்ய சாஸ்திரிகள்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நல்லூர் கணபதீஸ்வர
குருகுல மாணவர்கள்.

(58384)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

வேத விற்பன்னர், வித்யாஸாகரம், நியாய
சிரோன்மணி பிரம்ம ஸ்ரீ

**கி. சுப்ரம்மண்ய சாஸ்திரிகள்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாஸ நாத சுவாமி
திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

-- நல்லூர் சிவன் தேவஸ்தானம்

(58385)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி

**செல்லம்மா கந்தையா**

தோற்றம்: 11-02-1925

மறைவு: 17-07-1998

17-07-98 இல் இறைபதமெய்திய எங்கள் குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16-08-98) ஞாயிற்றுக்கிழமை பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளன. இதனைத் தொடர்ந்து நிகழும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

128, அம்பலவாணர் றோட்,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

(58378)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவநெறி கல்வி நிலையம்

839, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)

ஆரம்பம்: 24 08 1998 திங்கள் 9 மணி

ஆண்டு 3 முதல் 11 வரையான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

குறிப்பு:- 09-08-98 இல் நடைபெற்ற புலமைப்பரிசில் வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(58380)



## DCS, COLLEGE OF COMPUTER TECHNOLOGY

MICROSOFT APPLICATIONS

New courses commence on 22nd August 1998

Diploma in Office 97 Applications

Duration: Six Months

| | |
|---|---|
| Windows ' 98 | Excel 97 |
| Word 97 | Power Point 97 |
| Access 97 | |

Certificate Course

Duration: Two Months

| | |
|---|---|
| MS Windows' 98 | MS DOS |
| MS Word | Lotus |
| MS Power Point | dBase III+ |
| MS Excel 97 | Pascal |
| MS Access 97 | Page maker |

For further details contact the undersigned

- DIRECTOR (Ad.)

DCS, College of Computer Technology,
124/2, Palaly Road,
Thirunelvely,
P. O. Box 144,
Jaffna.

(58340)



# வாழ்த்துகின்றோம்

ஈழத்துச் சிற்பக்கலை மரபுக்கு
வலுவும், வனப்பும் சேர்க்கும்
சிற்பச் சக்கரவர்த்தி, சிற்பராஜ சிம்மன்,
கலாபூஷணம்

## ஆறுமுகம் ஜீவரட்ணம்

அவர்கள் அறுபதாண்டு அகவையைக் கொண்டாடும் இந்த நல்ல நாளிலே அவரது கலைச்சேவை மேலும் மேன்மைகாண, அவரைப் பல்லாண்டு வாழ்கவெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கலாநிதி எஸ். சிவலிங்கராஜா
குடும்பத்தினர்.

பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.

(58328)


## தபாலகம் இடம் மாறும்

யாழ்ப்பாணம், ஓ. 16

தற்பொழுது யாழ். கண்டி வீதியில் மாக்பெட் கட்டடத்தில் இயங்கி வரும் யாழ். பிரதம தபாலகம் ஸ்ரான்லி வீதியிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

1987 மார்ச் 7 ஆம் திகதி தொடக்கம் மாக்பெட் கட்டடத்தில் இந்த தபாலகம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் இந்த தபாலகம் இல. 62/6, ஸ்ரான்லி வீதி (ஆர். ஜே. பில்டிங்) இல் இயங்கவுள்ளது.

தபாலகத்தை இடமாற்று வதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. (இ-5)

## பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக மோகனதாஸ்

யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக எஸ். மோகனதாஸ் கடந்த வியாழனன்று பதவியேற்றார்.

தமிழ் தெரிந்த பொலிஸ் அதிகாரி ஒருவரை யாழ். பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரியாக நியமிக்குமாறு யாழ்.மேயர் பொ.சிவபாலன் விடுத்த கோரிக்கையை அடுத்து பொலிஸ் மா அதிபர் இந்த இடமாற்றத்தைச் செய்துள்ளார்.

இவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிவந்தார். (இ-3)

## முதலுதவி பயிற்சி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினால் முதலுதவி பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி இப்பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.

பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்கென செஞ்சிலுவைச்சங்க கொழும்பு தலைமையகத்திலிருந்து இரு அதிகாரிகள் யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள 14 பிரிவுகளிலிருந்தும் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் இருவர் வீதம் இந்தப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள வுள்ளனர். (இ-5)


# எமது இதயபூர்வ வாழ்த்துக்கள்

மயிலிட்டி தெற்கு கட்டுவனைப் பிறப்பிடமாகவும், குரும்பசிட்டியை வசிப்பிடமாகக் கொண்டவரும், எமது நலன்புரிச் சங்கத்தின் உப செயலாளருமான

திரு. துரைச்சாமி கலியுகவரதன்
(மின்சார பகுதி, மயிலிட்டி உப அலுவலகம்)
அவர்கள்

யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமனம் பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் வலி. வடக்கு சனசமூக நிலையங்களின் சமாசம் (உபதலைவர்), மயிலிட்டி தெற்கு அந்திய கால சகாய நிதி சங்கம் (செயலாளர்), வளர்மதி சனசமூக நிலையம் (செயலாளர்), அவர் தம் சமூகப்பணி வளரவேண்டி குரும்பை நகர் முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
உப அலுவலகம் மயிலிட்டி.
ஊழியர் நலன் புரிச்சங்கம்.

(58352)



குருபாதம்

# மனையியற் கண்காட்சி

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

காலம்: 16 08 - 98 ஞாயிறு
காலை 10-00 மணி முதல்
17 - 08 98 திங்கள் மாலை 5-00 மணி வரை

பிரதம விருந்தினர்:- இ. சண்முகரட்ணம்

புதிய வகுப்புகள் ஆரம்பம் 23 - 08 - 98
ஞாயிறு காலை 10-00 மணி

- ★ தையல் ★ சமையற் பாகம்
- ★ பூ வேலை ★ கைப்பணி
- ★ துணியில் வர்ணம் தீட்டுதல் (பத்திக் பெயிற்)
- ★ மணமகள் அலங்காரம்
- ★ கோலம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
நல்லூர்.

[58324]



## ST. JOHN'S COLLEGE, JAFFNA
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
# ADMISSION - 1999

1. பின்வரும் வகுப்புகளில் வெற்றிடங்கள் உள.
ஆண்டு 1, ஆண்டு 6

2. (அ) விண்ணப்பப் படிவங்களை அவ்வக் கல்லூரிகளிலிருந்து 01-09-1998 முதல் 15-09-1998 வரை பெற்றுக்கொள்ளலாம்.
(ஆ) எக்காரணம் கொண்டும் 15-09-1998-க்குப் பின் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டா.
(இ) எமது விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
(ஈ) விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 21 - 09 - 1998. அத்திகதிக்குப் பின் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

3. பிழையாக நிரப்பப்பட்டவையும், பூரணமாக நிரப்பப்படாதவையுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படலாம்.

4. ஆண்டு ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரற் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.

5. விண்ணப்பப் படிவங்களை ஞாயிறும், விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அவ்வக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

6. ஒரு படிவத்திற்கான கட்டணம் ரூபா 250

7. வயதெல்லைகள்:-
அ) ஆண்டு ஒன்று — விண்ணப்பதாரி 01-02-93 க்கும் 31 - 01 - 94 க்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
ஆ) ஆண்டு ஆறு — விண்ணப்பதாரி 01-02-88 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

8. பிரவேசப் பரீட்சை:-
சென். ஜோன்ஸ் கல்லூரி:
ஆண்டு ஆறு வகுப்புக்கு 0 3 - 10 - 98 காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி:
ஆண்டு ஆறு வகுப்புக்கு 17 - 10 - 98 காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

9. ஆண்டு 10, 11 வகுப்புகளுக்கான விண்ணப்பங்களையும் காரியாலயத்தில் இதே நாள்களில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சை மார்கழியில் நடத்தப்படும்.

விவரங்கள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்.

- அதிபர்கள்

(சி/4434)



# உயர் கல்வி - ரஷ்யா

| மருத்துவம் | MEDICINE AND DENTISTRY

இலங்கையிலும் சர்வதேச நாடுகளிலும் அங்கீகாரம் பெற்றது.
வருடாந்தக் கட்டணம் U. S. $ 2000 மாத்திரமே!

| பொறியியல் | பல பிரிவுகளுண்டு

ENGINEERING: Civil, Mechanical, Electrical, Electronics Telecommunication, High-ways, Aeronautices ETC. வருடாந்தக் கட்டணம் U. S. $1500 - 1300

திறமைச் சித்தி G. C. E. A/L இல் 4 பாடங்களிலுமுள்ளோருக்கு சகாய கட்டண வசதியுண்டு - 50% கழிவு கொடுக்கப்படும்.

AGGREGATE MARKS 220- க்கு மேலுள்ளவர்களுக்கு மேலதிக சகாய கட்டண வசதி கொடுக்கப்படும்.

1998/1999 ஆம் கல்வி ஆண்டுக்கான அனுமதி நடைபெறுகிறது.
கல்வி தொடர்பான சகல விவரங்களும் இலவசமாக வழங்கப்படும்.
உடன் பயண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

பின்வரும் ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்
1. G. C. E. A/L Certificate - 4 பாடங்கள்
2. பிறப்புச் சாட்சிப் பத்திரம்
3. தேசிய அடையாள அட்டை

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும். | யாழ்ப்பாணத்திலுள்ளோர் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.

## TVER LANKA ASSOCIATES
### Educational Consultants

16, DAYA ROAD, OFF HAMPDEN LANE
WELLAWATTE, COLOMBO - 6

(பதிவு பெற்ற ஸ்தாபனம்)
(உதயன் அலுவலகத்திற்கு அண்மையில்)

தொலைபேசி எண்கள்: 592736, 586591 FAX:- 586591

(சி/ 4537)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# பிள்ளைகளே, பெற்றோரைப் பேணுக; அதுவும் ஓர் இறை தொண்டுதான்!

## விளக்கம் என்ன?

போர்ச் செலவுகளுக்கு மேலும் 800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருடத்துக்கென ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 4,500 கோடி ரூபாவுக்கு மேலதிகமான நிதி இது.

போர்ச்செலவுக்குமேலும் நிதி ஒதுக்கப்பட்டாலும் அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்படமாட்டா, என்று பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார்.

மேலதிக நிதி குறை நிரப்புப் பிரேரணை மூலம் அன்றி, திறைசேரியின் பொதுநிதியில் இருந்தன்றி பாதுகாப்பு வரி மூலமே பெறப்படும்; ஆகையால் அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்படமாட்டா; என்பது பேராசிரியரின் உறுதி மொழி.

மேலும் அரசாங்கத்திற்கு நிதித் தட்டுப்பாடு ஏற்படவில்லை. போதியளவு பணம் இருக்கிறது; என்றும் பிரதிநிதிஅமைச்சர் உறுதிபடக் கூறியுள்ளார். வரி மற்றும் வெளிநாட்டு செலாவணி மன்னிப்புச் சட்டமூலம் மீதான விவாதத்தின் போது நாடாளுமன்றத்தில் இதனை தெரிவித்திருந்தார்.

அரசாங்கத்திடம் போதியளவு பணம் இருக்கிறது; அபிவிருத்திப் பணிகள் நிறுத்தப்படமாட்டா;என்று பேராசிரியர் பீரிஸ் கூறிக் கொண்டிருக்கும் அதே வேளையில்–

வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த இடம்பெயர்ந்த சுமார் 50 ஆயிரம் தமிழ்க் குடும்பங்களின் நிவாரணம் கடந்த ஜூலை மாதம் தொடக்கம் நிறுத்தப்பட்டு விட்டது!

அது மட்டுமா?

வடக்கு–கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் ஆரம்பிக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான வேலைகளும் அரை குறையாக நிறுத்தப்பட்டு விட்டன.

இவற்றுக்குக் காரணம்?

அரசுக்கு நிதிப்பற்றாக் குறை உண்டாகி இருப்பதாலேயே என்று தெரிவிக்கப்பட்டது.!

பிரதி நிதி அமைச்சர் கூறுவதும், தமிழ் மக்களினதும் தமிழ்ப் பிரதேசங்களினதும் வசதிகள், நலன்கள் குறைக்கப்படும் நடைமுறையும் பெரும் முரண்பாட்டு நிலையில்உள்ளது.

உண்மை எது, பொய் எது என்று தமிழ் மக்கள் யாரிடம் தெரிந்து கொள்வது?

பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் பீரிஸ்கூறுவது போல அரசுக்கு நிதிப்பற்றாக்குறை இல்லையெனின், தமிழ் மக்களின் நலன்கள் மீதும், வசதிகள் மீதும் அரசாங்க அதிகாரிகள் கை வைப்பது ஏன்?

தமிழ் மக்களை அகதிகளாக்கியதும் தமிழ் மண்ணின் அபிவிருத்தியை குலைத்ததும் போரே. அந்தப் போரைத் தொடர்ந்து அழிவைப் பெருக்குவதற்கு அரசிடம் பணம் உண்டு. ஆனால் போரினால்பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவும் விடயங்கள் குறித்துப் பிரஸ்தாபிக்கப்பட்டதுமே, அவற்றைக் கேட்டவுடனேயே, அரசுக்கு "நிதிப்பற்றாக்குறை" வந்து விடுகிறது.

இதன் விளக்கம் என்ன, விவரம் என்ன? அரசு தெளிவாக்குமா?

---

இயேசு இந்தப் பூவுலகில் வாழ்ந்த போது, தம்மை வளர்த்த பெற்றோருக்கு எப்பொழுதும் கீழ்ப்படிவுள்ளவராகவே இருந்தார். தான் சிறுவனாக இருக்கின்ற போது பெற்றோரோடு ஆலயம் சென்றார். அவர்களது வேலைகளில் பங்கேற்றார்.

'உன் தந்தையையும் தாயையும் மதித்து நட. இதனால் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குஅளிக்கும் நாட்டில் நீ நெடுநாள் நலமுடன் வாழ்வாய். (லேவிய / இ. சட்ட நூல் 5:16) என்று இறைவன் பத்துக் கட்டளைகளில் ஒன்றாக வகுத்துத் தந்துள்ளார்.

நாம் நமது நாட்டில் நலமுடன் வாழ்வது, எமது பெற்றோரை மதிப்பதிலே தான் தங்கியுள்ளது என்றால் இக்கட்டளைஎவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்பதனை உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

இன்றைய பிள்ளைகள் தமது பெற்றோரை சுமையாய்த்தான் எண்ணுகின்றனர். தம்மைத் தாலாட்டிச் சீராட்டிப் பேணிப் பாதுகாக்கும் பெற்றோரை வெறுக்கின்றனர்.

இயேசு தாம் பூவுலக வாழ்வை நிறைவேற்றி, பிதாவண்டைக்குச் செல்லப் போகும் வேளையிற் கூட, தமது தாயாருக்குத் தான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத் தவறவில்லை. சிலுவைக்கு அருகில் தனித்து விடப்பட்ட இரு உள்ளங்கள் கதறிக் கொண்டுள்ளன. அவரை வளர்த்து, அவரில் கரிசனை உடையவராக வாழ்ந்த அவரது தாயார் மரியாள்; எல்லா சீடர்களும் அவரை விட்டு ஓடிப்போன வேளையிலும் கூட தான் ஓடிப் போகாது தன் தலைவனை நோக்கிக்கொண்டிருந்த அவரது அன்பார்ந்த சீடன். இங்கு இருவருக்கும் உறவின் தேவை உள்ளது. எனவே அந்த இரு தேவைகளையும் இணையச் செய்வதன் மூலம் இயேசு அங்கு உறவின் நிறைவு ஒன்றை ஏற்படுத்துவதை நாம்பார்க்கின்றோம்.

"இயேசு தம் தாயையும், அருகில் நின்ற அன்புச் சீடரையும் கண்டு, தம் தாயிடம் 'அம்மா, அவரே உமது மகன்' என்றார். பின்னர் தம் சீடரிடம் 'இவரே உமது தாய்'' என்றார். அந்நேரம் முதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்.'' (யோவான் 19, 26, 27)

இங்கு இயேசு இன்னொரு

**ஞாயிறு நற்பிரசாதம்**

காரியத்தையும் நமக்குத் தெளிவுபடுத்துகின்றார். அதாவது தாய் ஸ்தானத்தில் இருக்கின்றவர்கள் அனைவரும் தம் சொந்தப் பிள்ளைகளை மட்டுமல்லாது அந்தப் பராயத்தில் இருக்கிற அனைவரையும் தம் சொந்தப் பிள்ளைகளாகக் கருதவேண்டும்.

அதேபோன்று ஒவ்வொரு பிள்ளைகளும் தமது தாய்மாரைக் மட்டுமல்லாது. ஏனையோரையும் தமது சொந்தத் தாய்மாராகக் கருத வேண்டும். ஓர் உலகளாவிய ரீதியான ஓர் உறவுப் பிணைப்பை யாவரும் கைக்கொள்ள வேண்டும் எனும் நோக்கில் இயேசுபெருமான் ஆரம்பப் படியில் கால் வைப்பதை நாம் பார்க்கின்றோம்.

இயேசுவைப் பார்ப்பதற்கு தாயாரும் சகோதரரும் ஒரு முறை ஆலயத்துக்குச் சென்றபோது என் சொற்களைக்கேட்டு இறைவனின் வழியில் நடப்பவர்களே என் தாயும் சகோதரரும் என்றார். ஆகவே நாம் இயேசுவுக்கு உறவினராக மாற வேண்டுமெனின் அவரது தாயாரான மரியாளைப் போல், அன்பார்ந்த சீடனைப்போல் அவருக்குக்கீழ்ப் படிவுள்ளவர்களாக, சிலுவை பரியந்தம் பின் தொடர்பவர்களாக இருக்க வேண்டும்.

எமது பூவுலக வாழ்வுக்கு இயேசு முன்மாதிரியைக் காட்டிச்சென்றுள்ளார்என்று சொல்லிக்கொள்கின்ற நாம், அவரைப்போலவே பெற்றோரைப் பேணுபவர்களாக, அவர்களுக்கு வேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்பவர்களாக வாழ்வதுதான் உண்மையான இறைபணியாகும்.

சிந்திப்போம்; செயற்படுவோம்.

சகோ. பி. தேவதாஸ்

---

நல்லூர் உற்சவகால சிறப்பிதழ்

## நல்லைப் பதியுறையும் கந்தசாமி

தந்தைக்கு உபதேசம் செய்த சாமி
தண்டமதைக் கரத்திலே கொண்ட சாமி
விந்தைகள் பலவும் புரியும் சாமி
வீரனாம் சூரனை வதைத்த சாமி
எந்தப்பெரு வினைகளும் போக்கும் சாமி
ஏறுமயில் ஏறி விளையாடும் சாமி
செந்தமிழர் போற்றி வணங்கும் சாமி
சீர்நல்லைப் பதியிலுறை கந்தசாமி!

அரியாலையூர் சி. சிவதாசன்

## அழைக்கும் என்னை ஏற்கவில்லையே!

இராகம் — ஆனந்தபைரவி          தாளம் — ஆதி

பல்லவி

பாடிப்பாடி அழைக்குமென்னைப் பார்க்கவில்லையே
—உள்ளம்
வாடிவாடி அழைக்குமென்னை ஏற்கவில்லையே
—முருகா!
......(பாடி......)

அனுபல்லவி

தேடித்தேடி நல்லைவந்தேன் உன்னைப்பார்க்கவே
—நித்தம்
ஓடி ஓடி நல்லைவந்தேன் துயர்கள் போக்கவே
—குமரா!
... ..(பாடி.....)

சரணம்

நாடிநாடி உன்தன் எழில் சாற்றக் கண்டதால்
—அன்பர்
சூடிச்சூடி உன்தன் அருள் போற்றக்கேட்டதால்
—அடியார்
கூடிக்கூடி உன்தன்புகழ் சொல்லக்கேட்டதால்
—அன்பர்
கோடிகோடி யாகநல்லை சேரக்கண்டதால்
—முருகா!
......(பாடி......)

''வயலூர் முருகா''

---



## நாயேனை ஆண்டிடடா!

நல்லைப்பதிக்கரசே நல்லைப்பதிக் கரசே
நல்ல வழி காட்டி நாயேனை ஆண்டிடடா

கல்லை நிகர்த்தமனம் கரைய வருள் தாடா
எல்லையில்லா இன்பத்திலே எனை
இருத்தி வைத்திடடா

கொல்லா வரமெனக்குக் குவலயத்தில் வேணுமடா
எல்லா ரிடத்துமன்பாய் இருப்பதெனக் கிச்சையடா.

...யோகர் சுவாமிகள்

---

## சாத்வீகப் போராட்டம் நடத்த ஐ.தே.க. முடிவு

கொழும்பு, ஓக. 16

அரசாங்கம் நீதியான தேர்தலை நடத்தும் வரை சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுப்பது என்று ஐ. தே. க. செயற்குழு நேற்று முன்தினம் முடிவு செய்துள்ளது.

ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் நடந்த இக்கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைப்புப் பற்றி ஆராயப்பட்டது.

நேற்று முன்தினம் ஹைட் பார்க் மைதானத்தில் ஐ. தே. க. எதிர்ப்புக் கூட்டம் ஒன்றையும் நடத்தியது. இதில் எட்டாயிரம் பேர் வரையில் கலந்து கொண்டனர்.

ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு மேயர் கரு ஜெயசூரிய உட்படப் பலர் உரையாற்றினர். (உ–3)

## பயிற்சிப்பட்டறை

கொழும்பு மார்க்கா நிறுவனத்தினரால் புனர்வாழ்வு புனர் நிர்மான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் சம்பந்தமாக நாளை தொடக்கம் 1–ம் 9 ஆம் திகதி வரை கொழும்பில் பயிற்சிப்பட்டறை ஒன்று நடத்தப்படவுள்ளது.

இப்பட்டறையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிபர்களும், அரச திணைக்களத் தலைவர்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ–5)

## பாராட்டு விழா

சமாதான நீதிவானாக நியமனம் பெற்ற இ. குழந்தை வடிவேலுக்கு கைதடி மக்கள் நடத்தும் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கைதடி ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரமத்தில் தலைவர் சு. செல்வராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் பல சமூக, சமயத்தொண்டர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குவர். (ஐ–ரி)

---

**உதய வாக்கு**

பணத்தை வீணாக அழிப்பதை விட பணத்தில் பேராசை வைப்பதே மனிதனை அதிகமாக நாசஞ் செய்யும்.

- சேவியர்

---

## நாளை

ஆவணி - 01
திங்கட்கிழமை
திதி: தசமி
முற்பகல் 11.32 வரை
நட்சத்திரம்: மிருகசீடம்
முன்இரவு 11.12வரை.
சுபநேரம்: 12.05 - 1.35
ராகுகாலம்: 7.35 - 1.35
(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### உடன் வீடு விற்பனைக்கு

இல. 11, சோமசுந்தரம் அவன்யுவில் உள்ள S. ரவீந்திரனுக்குச் சொந்தமான $1\frac{1}{2}$ பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதி கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு:K லோகேந்திரம், 29, சோமசுந்தரம் அவன்யு சுண்டுக்குளி. (58361)

சகல வசதிகளையும் கொண்ட மூன்று பரப்புக் காணியுடனான 3 அறைகளைக் கொண்ட வீடு உடன் விற்பனைக்கு உண்டு. இல. 23 விதானையார் வீதி, சுண்டுக்குளியில், தொடர்பு:- 31 விதானையார்வீதி, சுண்டுக்குளி. (58404)

### விற்பனைக்கு

T. V, டெக், வீட்டுத்தளபாடங்கள், தையல் மெசின் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நாள்கள் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்கள். முகவரி S. தங்கராஜா, பதிவாளர் லேன், சுதுமலை தெற்கு, சுதுமலை. (58366)

சுன்னாகம் குளிரருவி, சித்திரகலா. தளபாடங்கள் அலுமினிய பீடிங் கவுண்டர், சோக்கேஸ், அலுமாரிகள், எயர்க்கண்டிசன் குவாட்டா ஜெனரேட்டர், செற்றிகள், கதிரை மேசை, வோசிங் மெசின், A - 40 பரீனா காரும் வேறும்பல வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. உடுவில் பெண்கள் பாடசாலை அருகில் தபாற்கந்தோர் முன்பாக மானிப்பாய் வீதி, உடுவில். (58377)

### மணமகள் தேவை

பட்டதாரி அரசாங்க ஊழியர் 33 வயது செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனுக்கு கல்வி அறிவு உள்ள மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். 772, C/O உதயன். (58363)

### திருமண சேவை

சாயி மங்கள திருமண சேவையில் பல ஆண்டு காலமாக உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் திருமணங்களை நிறைவேற்றி முன்னோடியாக விளங்குகின்றது. உங்களுக்கு மணமகள், மணமகன் தேவைப் படின்சாதகக்குறிப்பு, குடும்ப விவரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். V. மகேந்திரன் 27, இராஜசிங்கா றோட், வெள்ளவத்தை, Colombo-06. (58367)

### மீண்டும் யாழில்

A/L. O/L தமிழ் பாடத்தில் அதிவிசேட சித்திக்கு (6 மாதத்தில்) உத்தரவாதம் தரும் ஆசிரியர் திரு. என். புவனேந்திரனின் B.A. (Hons) வகுப்புக்கள். பிரத்தியேக மாணவரும், வெற்றிடமுள்ள கல்வி நிறுவனங்களும் நாடலாம். 63. பொற்பதிவீதி, கொக்குவில். (58282)

### இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு; 15, 6 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சின்னக்கடைக்கு அண்மையில்). (58369)

புறோயிலர் (Broiler) இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். (5), 17, கோயில்வீதி, யாழ்ப்பாணம். (58357)

### தேவை

சிறு தொழில்கள் செய்வதற்கு இளைஞர்கள் தேவை. மேலதிக விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி: கோ. விஜயகுமார் 192/1, நாவலர்வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். [58277]

### ஆங்கிலக்கல்வி

ஆங்கிலம் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தினரால் தொழில் செய்பவருக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் ஆண்டு 6 முதல் 11 வரை வீட்டுக்கு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். இல. 771, மே/பா உதயன். (58325)

### ஆங்கிலம் / சிங்களம்

ஆண்டு 3 முதல் 11 வரை ஆங்கிலம், ஆங்கில இலக்கிய வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சிங்களம் புதிதாக ஆரம்பிக்க விரும்புவோர் சனி/ஞாயிறு பிற்பகலில் ஒழுங்கு செய்து கொள்ளலாம். T. Sagathevan, 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (58388)

### கோழி மருந்து

16 - 8 -98 ஞாயிற்றுக் கிழமை இன்று காலை 10 மணியளவில் கோழிகளுக்கான றணிக்கட் மருந்து வழங்கப்படும். தேவையானோர் உடன் வந்து பெற்றுக் கொள்ளவும். மல்லிகாபதி; சந்தைமுன் ஒழுங்கை, மானிப்பாய். (58387)

### O/L விஞ்ஞானம் 98

பயிற்றப்பட்ட ஆசிரியரால் உங்கள் வீட்டிலேயே (யாழ். நகரப் பகுதிகளில்) பரீட்சைக்கு தயார்படுத்தப் படும். முகவரி: திரு A. Sellathurai, Mudakadu Karaveddy (58386)

## வாங்க விற்க

உதிரிப்பாகங்களுக்கும், பாவனைக்கும் ரி. வி., டெக், சற் றேடியோக்கள், மணிக்கூடுகள் வாங்கப்படும், விற்கப்படும், பழுதுபார்த்துத் தரப்படும்; ரி. வியின் பழைய, புதிய அன்ரனாக்கள் பொருத்தப்படும்.

**வீனஸ் டெல்கா**
284, ஸ்ரான்லி வீதி (நாகவிகாரை முன்).
யாழ்ப்பாணம்.
TEL. NO. 2064 (சி/4534)

## பிற்போடப்பட்டது
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

கலைநேசன் சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்காக 15 - 08 - 1998 மாலை 4 - 30 மணியளவில் நடத்த இருந்த அதிர்ஷ்டலாபசீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற் போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

நிர்வாகத்தினர்
கலைநேசன் சனசமூக நிலையம்
(C/4558)

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 3 ஆம் நாள் (19 - 08 - 98) புதன்கிழமை காலை 10-32 மணி முதல் 11-45 மணி வரைக்குமுள்ள நல்வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**நவரத்தினராசா**
(நவம்)
அவர்களுக்கும்
நவம் வீடியோ
பருத்தித்துறை



எமது புத்திரி
திருநிறை செல்வி
**சுகந்தினி**
அவர்களுக்கும்

வியாபாரி மூலை, இன்பர்சிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் திருமணம் நிகழ்த்த இறைவன் திருவருள் கைகூடியிருப்பதால், அவ்வமயம் தாங்கள் தங்கள் குடும்பத்தவர்களுடன் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி திருமண நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி வை. சிவசுப்பிரமணியம்
ஓடக்கரை,
பருத்தித்துறை.

திரு. திருமதி வி. தங்கவடிவேல்
இன்பர்சிட்டி,
பருத்தித்துறை.

(இரு வீட்டார் அழைப்பு) (58393)

## பெரியவர்...

(3 ஆம் பக்கத் தொடர்)

ளுவர் மறுக்கவில்லை. ஆனால் மேலே இருக்கப் பொருத்தமில்லாதவர் மேலே இருப்பதையும், கீழே இருக்கக் கூடாதவர் கீழே இருப்பதையும் அவர் கவனிக்கிறார். சில வேளைகளில் இப்படி முறை மாற்றம் நடந்துவிடுவதை உலகெங்கும் நாம்காண்கிறோம்.

இத்தகைய சூழலைக் கண்ட வள்ளுவர் மேல் கீழ் இரு ஆகிய மூன்று சொற்களை மட்டுமே பயன்படுத்திப் பேசுகிறார்.

''மேல் அல்லாதவர் மேல் இருந்தும் மேல் அல்லர் கீழ் அல்லாதவர் கீழ் இருந்தும் கீழ் அல்லர்'' என்று அவர் கூறுகிறார்.

இந்தக் குறள், பிழையாக மேலே இருப்பவரை எச்சரிக்கிறது; தவறுதலாக கீழ் இருப்பவருக்கு ஆறுதல் கூறுகிறது; இடம்மாறி இருப்பவர்களைச் சுட்டிக் காட்டிப் பொய்யான மாயத் தோற்றத்தை நீக்கி வழிபடுவதை எங்கே நிறுத்த வேண்டும் - எங்கே தொடங்கவேண்டும் என்று மக்களுக்கு உணர்த்தி அவர்களைத் தலைநிமிர்ந்து நடக்கத் தூண்டுகிறது.

(நன்றி: ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்)

## கருத்துக்களில்...

(3 ஆம் பக்கத் தொடர்)

ஒருமுறை நீதிவிசாரணை மன்றம் கூடியபொழுது இரு தரப்பினரும் சமுகமளித்திருந்தார்கள். ஆறுமுகநாவலர் முன்னதாகவேவந்திருந்தார். வள்ளலார் சற்றுத் தாமதமாகவே வந்தார். வள்ளலார் நீதிமன்ற வாசலில் வருவதைக் கண்டதும், பலர் எழுந்து அவருக்கு மரியாதை செய்தனர். அப்பொழுது ஆறுமுகநாவலரும் எழுந்து மரியாதை செலுத்தினார்.

அதனைக் கண்ட நடுவர், ஆறுமுகநாவலரிடம் 'உமது எதிரிக்கு நீர் எழுந்து மரியாதை செலுத்துவதன் நோக்கமென்ன' என்று வினவினார். உடனே ஆறுமுகநாவலர் 'அவர் ஒரு பெரியவர்' என்றார்.

இதிலிருந்து நாம் அறியக் கூடியது என்னவெனில், ஆறுமுகநாவலரின் பெருந்தன்மை எத்தன்மையது, அவர் பண்புடைமை எவ்வளவு உயர்ந்தது என்பதேயாகும். ஆறுமுகநாவலர் கொண்டிருந்த கொள்கை எப்படி அவருக்கும் அவரது சகாக்களுக்கும் சரியெனப்பட்டதோ, அதே போன்றுதான் வள்ளலாரும் தன் கோரிக்கையிலும் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருந்தார். இருவரும் தத்தம் கொள்கைகளுக்குரிய நெறிகளை வளர்த்தனர். இதில் கருத்து வேற்றுமைகள் தோன்றியமை தவிர்க்கமுடியாததாயிற்று.

### தமிழுக்கு ஒருமித்த தொண்டு

ஆயினும் இரு பெரியவர்களும் எமது, இனிய தமிழ் அன்னைக்கு ஒருமித்துத் தொண்டாற்றினர் என்றே கொள்ள வேண்டும். நாவலர் பல நூல்களை உருவாக்கினார். சைவத்தையும், தமிழையும் வளர்த்தார், கட்டுக்கோப்புகளுக்குட்பட்ட மத வாழ்வை வலியுறுத்தினார்.

வள்ளலார், பொதுவாழ்வையும் தூயபக்தியையும் சாதிமதபேதம் கடந்த நிலையில், சுத்த சமரச சன்மார்க்கநெறியின்வழி கடைப்பிடித்து வாழ வழிவகுத்தார். பல அருட்பாக்களையெல்லாம் வள்ளலார் ஆக்கியளித்தார்.

கருத்துவேறுபாடுகள் அவர்கள் கொண்டிருந்த கொள்கைகளில் ஏற்பட்டபோதிலும், இருவரும் ஒழுக்கத்தையும், தூயநெறியையும் வளம் பெறச் செய்யவேண்டும் என்ற ஒரேகுறிக்கோளைக் கொண்டிருந்தனர். இதனைச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டின் மூலம் சிலம்புச் செல்வர் சிவஞானக் கிராமணியார் விளக்குகின்றார். இராமாயணத்தையே அதில் அவர் குறிப்பிடுகின்றார்.

''தன் சிற்றன்னையாகிய கைகேயியின்வேண்டுகோளுக்கமைய காடேகிய இராமனைக் கூட்டிவந்து அரசை வழங்கவேண்டுமென்றுகருதி, அண்ணன்பால் கொண்ட அன்பு தணியாத பரதன், தன் பரிவாரங்களுடன் கங்கைக்கரை நோக்கிச் செல்கின்றான். இதனைக் கண்ணுற்ற இராமனை விட்டகலாது அவனுடனேயே சென்று வாழ்ந்து கொண்டிருந்த இலக்குவன் சீற்றம் கொள்கின்றான்.

''அண்ணா உங்களைக் காடேக வைத்ததுமல்லாமல், உங்களினால் தனது அரசுரிமைக்கு ஏதும் தடையேற்படுமோவென்று பயந்து போலும், உங்களை ஒழித்துக் கட்டுவதற்காகவே இங்கு படையெடுத்து வருகிறான் பரதன். அவனை எதிர்த்து நாம் போர் தொடுக்க வேண்டும் என்ற வகையில் பேசுகிறான்,

இலக்குவன் இராமன்பால் கொண்ட அன்பினாலேயே இவ்வளவும் கூறுகின்றான். பின்னர் நடந்தது என்ன? இருவரும் அளவில்லாத அன்பினையே அண்ணன்மீது வைத்திருந்தனர் என்பது தெரிய வருகின்றது. கருத்திலேதான் இந்த வேற்றுமைகளிருந்தன. — இப்படி ம. பொ. சி. அவர்கள் விளக்குவதிலிருந்து நமக்கு உண்மை ஓரளவு புரிகின்றதல்லவா?

எனவே, சர்ச்சையான சில விடயங்களையிட்டுத் தேவையில்லாமல் வியாக்கியானம் செய்து காலம் கடத்தாமல் நல்வழி நின்று, நமது பண்பாட்டையும் மொழியையும் காத்து வாழ்வோமாக.

ஆணவம் எள்ளளவும் கொள்ளாதவர் வள்ளலார். அவர்முன், வட மொழியன்பர் ஒருவர். வடமொழியே உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியென்று குறிப்பிட்டார், அதனைக் கேட்டதும், தமிழ்மொழிமேல் தனிப்பற்றுடைய வள்ளலார் ஆத்திரமேதுமின்றி 'அப்படியாயின் தமிழ்மொழி இந்த உலக மொழிகளுக்கெல்லாம் தந்தைமொழியாகும்' என்று கூறினார். இத்தகைய பண்புள்ளம் எவருக்கும் உண்டாக மாட்டாது.

அதே போன்று சைவத்தின் மேல் தணியாத பற்றுடைய ஆறுமுகநாவலர் மற்றைய மதங்களைப் புறக்கணித்திலர். கிறிஸ்தவ வேதத்தைத் தமிழில்மொழி பெயர்த்தளித்தவர் எம் நாவலர் பெருமானே.

ஆறுமுக நாவலரினதும், வள்ளலாரினதும் கொள்கைகளின் பொதுநெறியாக விளங்குவது திருக்குறள் என்னும் தமிழ் மறை கூறும்நெறியாகும். அத்தமிழ் மறை கூறும் வாழ்வினை உளப்பூர்வமாகக் கடைப்பிடித்து வாழ்வதொன்றே இவ்வுயர்ந்தோர்களுக்கு நாம் செய்யும் உண்மையான நன்றிக் கடனாகும். ★

## யாருடையது

தவறவிடப்பட்ட ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

**குறிஞ்சி ஜவுளி சமுத்திரம்**
நவீன சந்தை,
சாவகச்சேரி.
(சி/4555)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட

## அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ. து)

## பதவி வெற்றிடம்

1. பதவி:- விற்பனை உதவியாளர் (தற்காலிகம்)
2. சம்பளம்:- கடமையாற்றும் நாளொன்றுக்கு ரூபா 90 மொத்தவேதனமாக வழங்கப் படும்.
3. தகைமைகள்:- கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் சாதாரணதரம் அல்லது க. பொ. த. (சா/த) பரீட்சையில் எண் கணிதம்/ வர்த்தககணிதம்/ கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
4. வயது:- விண்ணப்பதாரிகள் 28-08-98 ஆம் திகதி 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
5. ஏனைய விவரங்கள்:-
   1. சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்களை மாத்திரம் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பப் படிவங்களையும் ஏனைய விவரங்களையும் பெற்றுக் கொள்வதற்காகத் தங்களது பெயர், முகவரி எழுதப்பட்ட 9'' x 4'' அளவினான முத்திரைக் கடித உறை ஒன்றை 21 - 08 - 98ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலமோ நேரடியாகவோ பெற்றுக் கொள்ளலாம்.
   2. விண்ணப்ப முடிவு திகதி:- 28 - 08 - 1998

பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி-4557)

---

யா / இணுவில் இந்துக்கல்லூரி

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

இடம்: யா/இணுவில் இந்துக்கல்லூரி
நாள்: 23 - 08 - 1998 (ஞாயிறு)
நேரம்: காலை 10 - 30 மணி
விடயம். புதிய உத்தியோகத்தர் தெரிவு கலந்துரையாடல்

பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி ப. சந்திரசேகரி
(செயலாளர்)

(58403)

---

## WALK-IN INTERVIEW

ஞாயிற்றுக்கிழமைகளில் (23, 30/ஆவணி)
10. 00 - 11. 30

**கணக்காய்வு உதவியாளர்**
[ Audit Assistants]

**கணக்காய்வு பயிலுநர்கள்**
[ Audit Trainees ]

தகைமைகள்:

1) வணிகமாணி / பதிவு செய்யப்பட்ட கணக்காளர் பரீட்சைக்குத் தோற்றியவர்களும் தேறியவர்களும் (HNDA, CIMA, ACA)
2) க. பொ. த. உயர்தர வணிகம்.

முடிவு திகதி 30 - 08 - 1998

விவரங்களுக்கு:

## அமர் அசோசியேற்ஸ்

(நிதுஷா ஸ்ரூடியோ)
பிரதான வீதி, நெல்லியடி.

வருமான வரிக்கணக்குகள், பொருள்கள், சேவைகள், வரிக் கணக்குகள் என்பனவும் அவை சம்பந்தமான ஆவணங்களும் தயாரித்துக் கொடுக்கப்படும்.

ஆலோசக கணக்காளர்

திரு. M. தியாகராஜா (A C A)
(கடன்கட்டுப்பாட்டாளர்,
தலைமைச் செயலகம், மக்கள் வங்கி,
கொழும்பு.)

க. கதிரித்தம்பி
AIAA, FIAB (London)

(58337)

---

## நல்லூரில் இன்று

நல்லூர் உற்சவகாலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 5. 30 மணி முதல் 7 மணி வரை ஒழுங்கு செய்துள்ள தெய்வீக இசையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை வீ. கே. நடராஜாவின் இசைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகும். (ஐ-8-30)

★ ★ ★

நல்லூர் உற்சவத்தை ஒட்டி ஆலய மேற்கு வீதி முத்து விநாயகர் ஆலயத்தில் '',கானகதாவாரிதி'' சிவ. வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் கம்பராமாயண இசைச்சொற்பொழிவுத் தொடரில் இன்று மாலை 5, 15 மணிக்கு 'மாயமான்' என்ற தலைப்பில் பிரசங்கம் இடம்பெறும். (ஐ-4-30)

## இறுதி ஆட்டமும் பரிசளிப்பும்

ஆவரங்கால் கிழக்கு லிங்கன் மத்திய சனசமூக நிலைய எவறெஸ்ட் விளையாட்டுக் கழகத்தின் 34 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிறு நடைபெறும் எவறெஸ்ட் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு விளையாட்டுக்கழகத் தலைவர் கி. இராசையா தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவின் பிரதம விருந்தினராக வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (இ-15)

---

**பாதிக்கப்பட்ட...**

(முதலாம் பக்கத் தொடர்)

சைக்குழு எம். பிக்களான என். ஆர். ராமேஸ்வரன். என். ஆர். ராமமூர்த்தி ஆகியோருடனும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இவர்கள் தமது நிலையை விளக்கினர்.

இதுதொடர்பாகபாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் நேற்று வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''பிறின்ஸஸ் காஷ்'' என்ற கப்பலில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று, யாழ். குடா நாட்டிலுள்ள வணிகர்களுக்கும், கட்டடப்பொருள் கூட்டுத்தாபனத்திற்கும், தனியாருக்கும் உணவுப் பொருள்கள், கட்டடப்பொருள்கள், வாகனங்கள், வாகனங்களின் உதிரிப்பாகங்கள், புடைவைகள், அழகுசாதனப் பொருள்கள், காகிதாதிகள், சைக்கிள் உதிரிப்பாகங்கள், வாகனப் பற்றறிகள் உட்பட 6 ஆயிரத்து 500 மெ. தொன் பொருள்கள் கொழும்பிலிருந்து ஏற்றி வரப்பட்டன.

சிறிலங்கா அரசாங்கத்தின் கொடியுடனும், சிறிலங்கா துறைமுக அதிகார சபையின் சட்டத்திற்கமையவும் 'குட்வில் றைம்' நிறுவனத்திற்கு சொந்தமான இக் கப்பலில் பொருள்கள் ஏற்றிவரப்பட்டன.

இக் கப்பலில் ஏற்றப்பட்ட பொருள்கள் யாவும் யாழ். பதிவு செய்யப்பட்ட வர்த்தகர்களினால் கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டு பருத்தித்துறையில் இறக்குவதற்கென அனுப்பப்பட்டன என்பதை இலங்கை மக்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இழப்புக் காரணமாகப் பெரும் துன்பத்தில் ஆழ்ந்துள்ள வர்த்தகர்களை மேலும் துன்புறுத்தும் வகையில் கைது செய்வதனை நிறுத்துமாறும் சம்பந்தப்பட்டவர்களை [illegible] கேட்டுக் கொள்கின்றோம் என்று வேண்டப்பட்டுள்ளது. (அ-15-5)

---

## வாழ்த்துகின்றோம்

52 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும்
பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை
ஆய்வு கூட தொழில் நுட்பவியலாளர்

## திரு. முத்தையா அருமைத்துரை

மேன்மேலும் சேவை செய்து நீடூழி நலத்துடன் வாழ வாழ்த்துகின்றோம்.

கிருஷ்ணபிள்ளை பரமதாஸ்
குடும்பத்தினர்.

மாவிசந்தி, கரவெட்டி. (சி-4567)

---

## அதிபர் பதவிக்கான வெற்றிடங்கள்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த

**யா/சுதுமலை வடக்கு த. க. பாடசாலை,**
**யா/சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலை**

ஆகிய இரு பாடசாலைகளுக்கும் அதிபர்களுக்கான வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கவும்.

பிரதிக் கல்விப்பணிப்பாளர்
சண்டிலிப்பாய்

[58375]

---

## வாழ்த்துகின்றோம்

அறுபதாவது அகவையில் கௌரவ ஜனாதிபதி
அவர்களின் கௌரவ விருதான
''கலாபூஷணம்'' விருதைப் பெற்று மணி விழாக்காணும்

## ஸ்தபதி திரு. ஆறுமுகம் ஜீவரட்ணம்

அவர்களையும், அவர் தம் பாரியாரையும், குடும்பத்தினரையும் அகம் மகிழ வாழ்த்துகின்றோம்.

கல்லடி இளைஞர்கள்
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

(58396)

---

## மணிவிழாவும் - பாராட்டுவிழாவும்

அறுபதாவது அகவையில்
இந்துசமய கலாசார அமைச்சினால்
''கலாபூஷணம்'' விருது வழங்கப்பெற்ற
திருநெல்வேலி காளிகோயிலடியைச் சேர்ந்த
சிற்ப சக்கரவர்த்தி

## ஸ்தபதி ஆறுமுகம் ஜீவரட்ணம்

அவர்களுக்கு
மணிவிழாவும், பாராட்டு விழாவும்

காலம்: 1998 - 08 - 16 ஞாயிறு பிற்பகல் 2-30 மணி
இடம்: பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய முன்றல்
தலைமை: பிள்ளைக்கவி திரு. வ. சிவராஜசிங்கம் (B A, Hons)
(விரிவுரையாளர். யாழ். பல்கலைக்கழகம்)

### நிகழ்ச்சிகள்

இறை வணக்கம்
மங்கள இசை ஈழத்தின் புகழ்பெற்ற நாதஸ்வர தவில் வித்துவான்கள்
வரவேற்புரை
தலைமையுரை
விழா நாயகனை கௌரவித்தல்
ஆசியுரை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய ஸ்வாமிகள்
வாழ்த்துரைகள்
திரு. இ. ஜெயராஜ் (அமைப்பாளர், அகிலஇலங்கை கம்பன் கழகம்)
திரு. ஆறு. திருமுருகன் (ஆசிரியர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
திரு சத்திகிரீவன் (செயலாளர் இந்துசமயப்பேரவை)
திரு. எஸ். என். ராமச்சந்திரா (பத்திரிகையாளர், வீரகேசரி)
சிந்தனைச் செல்வர் திரு, சிவ. ஆறுமுகசாமி J. P. (அமைப்பாளர், வடபிராந்திய இந்துபேரவை)
திரு. செ. நித்தியானந்தராஜா (கிராமசேவகர் திருநெல்வேலி)
பிரம்மஸ்ரீ ஜெகதீஸ்வர சர்மா (பிரதமகுரு பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம்)
திரு. க. சிவராசா (கிராமசேவகர் திருநெல்வேலி)
தர்மதீபம் திரு. ப. சிவலோகநாதன் (இணைச்செயலாளர் இந்து சமூக கலாசார நிலையங்களின்பேரவை)
பதிலுரை
நன்றியுரை

விழா அமைப்பாளர்கள்

திருநெல்வேலி. (58405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17 இந்தியா..

(முதலாம் பக்கத் தொடர்)

தேசக்குழு அதிகாரிகள் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

புலிகளின் பாதுகாப்பில் உள்ள இந்த 22 பேரில் கப்பல் கப்டன் உட்பட 17 இந்திய மாலுமிகளையும் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் நேரில் சந்தித்துப் பேசினர்.

இவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் கொழும்புக்கு அழைத்து வருவதற்காக வாகனங்களை வவுனியாவில் இருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு எடுத்துச்செல்ல ஏற்பாடாகி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மாலுமிகளின் நிலையை அறிய இந்திய தூதரக அதிகாரிகள் செஞ்சிலுவை சர்வதேசக்குழு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

அதே சமயம் கொழும்பில் இருந்து இந்தக் கப்பல் புறப்பட்ட நேரம், அதன் வேகம் ஆகியவற்றைக் கணிக்கும் போது முல்லைத்தீவுக் கடலில் இக்கப்பல் பல மணி நேரம் தரித்து நின்றிருக்கலாம் என்று படை வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் தெரிவித்தன.

அந்த நேர அவகாசத்தில் பெரும் தொகையான பொருள்கள் இறக்கப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

கிபிர் விமானத் தாக்குதல் காரணமாக கப்பலில் ஏற்பட்ட தீ அணைந்து விட்டதாகவும்—

நேற்று மாலை கப்பலில் மூன்றில் ஒரு பகுதி கடலில் மூழ்கிவிட்டதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

புலிகளால் இன்று விடுவிக்கப்பட உள்ள கப்டன் உட்பட 17 இந்திய மாலுமிகள் விவரம் வருமாறு:

வி. என். காக்கிறே, ரொமேஷ் சிங், ஈ. கே. ஐ. டயஸ், ஜெயன் சிங், சியாட், மேஜர் சிங்கா, டபிள்யூ. பி. டிசோசஸ், எம். சி. பெர்னாண்டோ, ரமேஷ்சந்திரா, எம். ஜி. சியாட், எஸ். ஜே. கொன்செல்வெஸ், எம். ஜி. நோயல், யோஸ் கிரவுல்கோ, வி. ஜி. பெர்னாண்டோ, மேர்வின் பிரிண்டோ, எஸ். வி. பெர்னாண்டஸ், ட்ரின்டாடி, கோமஸ். (இ-9-7-3)

## இன்றைய கிரிக்கெட்

டொனால்ட் கணேச குமார் வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இரண்டாவது கால் இறுதியாட்டம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

சிமாட்டி ரெக்ஸின் ஆதரவுடன் நடைபெறும் இன்றைய ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி மோதும். (இ-9)

## சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16

பளை வேம்படுகேணியில் நேற்று முன்தினம் இறந்ததாக இனந்தெரியாத ஒருவரின் சடலம் நேற்று பளைப் பொலீஸாரால், யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட நபர் விடுதலைப் புலி உறுப்பினர் என்றும் —

துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்த நிலையில் அவர் சயனைட் உட்கொண்டதாகவும் பலாலி இராணுவத் தலைமையகம் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-139-15)

## புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் அவரை வீட்டில் வைத்து சுட்டுக் கொன்று விட்டு தப்பியோடினார் எனவும்—

துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டு அவரைத்துரத்திச் சென்ற பொலீஸாரும் இராணுவத்தினரும் அந்த விடுதலைப் புலி உறுப்பினரைச் சுட்டுக்கொன்று அவரிடம் இருந்த பிஸ்டல், கிரனேட் ஆகியவற்றை கைப்பற்றினர் எனவும்—மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-9-164)

## சண்டிலிப்பாய்ப் பிரிவில் சுயதொழில் கடன்

வலி. தென்மேற்கு ஓக. 16

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 14 வீத வட்டி அடிப்படையில் ரூபா 50 ஆயிரம் வரையிலான சுய தொழில் முயற்சிக் கடன் வழங்க கைத்தொழில் அபிவிருத்திச் சபை முன்வந்துள்ளதாகப் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

பண்ணைத்தொழில், சிறு கைத்தொழில், தச்சுத் தொழில், சிறு வாணிபம் போன்ற துறைகளில் சுய தொழில் செய்யவுள்ளவர்கள் இக்கடனைப் பெற விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-185)

## மணிவிழாவும் பாராட்டு விழாவும்

யாழ்ப்பாணம், ஓக. 16

அறுபதாவது அகவையில் இந்து சமயகலாசார அமைச்சினால் ''கலாபூஷணம்'' விருது வழங்கப்பெற்ற திருநெல்வேலி காளிகோயிலடியைச் சேர்ந்த சிற்ப சக்கரவர்த்தி ஸ்தபதி ஆறுமுகம் ஜீவரட்ணம் அவர்களுக்கான மணிவிழாவும் பாராட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெறும். (இ-4)

## மிதிவெடி அபாயம்

வலி. தென்மேற்கு, ஓக. 16

பண்டத்தரிப்பு— கடாப்புலம் அரசினர் வைத்திய சாலை சூழலில் மிதிவெடிகள் இருக்கலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

மிதிவெடி அபாயம் தொடர்பாக பிரான்பற்று விவசாயசம்மேளன பிரதிநிதிகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகனுக்கு அறிவித்துள்ளனர்.

## சாதாரண...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளதாகவும்—

இவ்வாறு ஒழுக்கக்கேடாக செயற்படுபவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

தற்காலிகமாக நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள பொலீஸ் நிலையத்தில் இத்தகைய சம்பவங்கள் குறித்து முறைப்பாடுகள் செய்ய முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

## தாக்க...

(முதலாம் பக்கத் தொடர்)

மான தாக்குதல் நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டாம் எனவும் அவர் கேட்டிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-7-9-3)

## டாக்டர் உட்பட மூவர் கைது!

மட்டக்களப்பு, ஓக. 16

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் பணியாற்றும் டாக்டர் ஒருவர் உட்பட 3 பேர் பட்டிருப்பு பாலம் சோதனைச் சாவடியில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனியார் வைத்தியசாலை ஒன்றின் டாக்டரான எஸ். சுப்பிரமணியம் மற்றும் சமுர்த்தி ஊக்குவிப்பாளரான கே. இளங்கோ, பிரதேச செயலக ஊழியரான இ. இராஜரட்ணம் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர். (இ-21-7)

## பூவரசங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

பாதை நேற்றுத் திறந்து வைக்கப்படவில்லை என வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து செஞ்சிலுவை இணைப்பாளர் சி. கிஷோர் புதிய பாதையால் வவுனியா வருவார் என எதிர்பார்த்து படையினரும் அதிகாரிகளும் காத்திருந்த போதிலும் அவர் இப்பாதையால் வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-164-9)

## ஜனாதிபதியுடன்..,

(முதலாம் பக்கத் தொடர்)

சாட்டுக்கள் தொடர்பாக பூரண விளக்கத்தை வழங்க வேண்டும் என ஜனாதிபதியிடம் இந்தியத் தூதுவர் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

அதேசமயம் கொழும்பிலுள்ள இந்திய ராஜதந்திரிகளும் இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பான கூற்றுக்களை தெளிவுபடுத்த வேண்டுமென இலங்கை அரசைக் கேட்டுள்ளனர். (இ-7-9-3)

## தமிழ்க் கட்சிகள்..

(முதலாம் பக்கத் தொடர்)

துக் கேட்டிருந்தனர்.

அதனையடுத்தே இக்கட்சிகள் ஜனாதிபதிக்கு 'பக்ஸ்' செய்தியை தனித்தனியே அனுப்பிவைத்துள்ளன.

புளொட், ஈ. பி. டி. பி. மற்றும் ஈ. பி. ஆர். எல். எவ். தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய தமிழ்க் கட்சிகளே இவ்வாறு ஜனாதிபதிக்கு பக்ஸ் செய்தியை அனுப்பி வைத்துள்ளன. அத்துடன் அறிக்கையினையும் இவை வெளியிட்டுள்ளன.

இக் கட்சிகள் விடுத்த அறிக்கைகள் பின்னர் உதயனில் வெளிவரும். (இ-9)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
செல்வி சு. மகாலக்ஷ்மி அவர்களின்
அன்புத் தந்தையா
பிரம்மஸ்ரீ
கி. சுப்பிரமண்யசாஸ்திரிகள்

அவர்களின் திடீர் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய மன்றம்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

(58409)

## இதயபூர்வமான அஞ்சலி

வேத விற்பன்னரும் சமஸ்கிருத கல்வியின் வளர்ச்சிக்காக தம் வாழ்நாளை அர்ப்பணித்தவரும் சமய சாஸ்திர கலங்கரை விளக்காகத்திகழ்ந்தவருமான
வித்யாசாகரம் நியாய சிரோமணி
பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமண்ய சாஸ்திரிகளின்

மறைவிற்கு எமது இதயபூர்வமான அஞ்சலியைத் தெரிவித்து அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்,

அன்னாரின் ஆன்மா நல்லை முருகப் பெருமானின் திருவடிகளில் சாந்தி பெறுவதாகுக!

பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்,
இந்துநாகரிகத்துறை மற்றும்
சமஸ்கிருதத்துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

(58399)

## அஸ்தி நல்லடக்கம்

### அமரர் A. அடைக்கலம்

( ஓய்வு பெற்ற தபால் அதிபர் )

திருச்சியில் காலமான அமரர் அடைக்கலத்தின் பூதவுடல் சாம்பல், யாழ்ப்பாணம் 6/1 பேக்கரி லேன், ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து 17 - 8 - 98 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு திருப்பலி பூசைக்காக யாழ். அடைக்கலநாயகி தேவாலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.

மனைவி இந்திரா அடைக்கலம்,
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்.

6/1 பேக்கரி லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(58398)

Available for
RENT HOUSE
Within Municipality

Large House Next to the Kachcheri Completely renovated, available for Office or residence. for details write:

No. 770,
C/o Uthayan.

(58254)

எமது புதிய ஓடியோ
CD வெளியீடுகள்!

★ நம் ஊர் ரீச்சரம்மா
★ ரோசா பூ
★ ஜெயம்
★ உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்
★ குருபார்வை
★ சிவன்
★ சனி பகவானே சரணம்
★ மகாநதி ஷோபனாவின் முருகன் பாடல்கள்
★ தேவி ஸ்தோத்திரமாலா
★ சொல்லச் சொல்ல இனிக்குதடா

வீடியோ
CD வெளியீடுகள்!

★ மாமன் மகள்
★ அமைதிப்படை
★ புதிய மன்னர்கள்
★ சிவந்த மண்
★ உலகம்சுற்றும் வாலிபன்
★ சங்கராபரணம்
★ கிளிப் பேச்சு கேட்க வா

சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.

(சி/4576)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
''பிறின்ஸஸ் காஷ்'' கப்பலில்
பொருள்கள் அனுப்பிய
வர்த்தகர்களுக்கான
வேண்டுகோள்

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் ''பிறின்ஸஸ் காஷ்!'' கப்பலில் குடாநாட்டு வர்த்தகர்களால் குடாநாட்டு மக்களுக்கு ஏற்றப்பட்ட பொருள்கள் யாவும் குண்டு வீசி அழிக்கப்பட்டதாக எமக்கு கப்பலில் பொருள்களை அனுப்பிய வர்த்தகர்கள் அறிவித்துள்ளனர். இதனையிட்டு எமது கழகம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இந்த அழிவு தொடர்பான விவரங்களை இதுவரை எமக்குக் கையளிக்காத சகல வர்த்தகர்களும் சகல விவரங்களையும் தந்து உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

யாழ்ப்பாண வணிகர் கழகம்
இல. 19, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/4572)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அலுவலகமனையில் 16-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org